யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

விலை ரூபா 5-00 பக்கங்கள் 08

# வலம்புரி
# VALAMPURI

உள்ளே
க.பொ.த. சாதாரணதர மாணவருக்கான விஞ்ஞானம் பகுதி 1

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 07 புதன்கிழமை (23-08-2000) தொ. பேசி; 3378 ஒலி: 247

## ★ பொதுஜன ஐக்கிய முன்னணி அமைச்சரவையிலிருந்து அமைச்சர் அஷ்ரப் உட்பட மூவர் இராஜினாமா!

### அரச வட்டாரங்கள் பரபரப்பு

( கொழும்பு விஷேட நிருபர் )

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், துறைமுகங்கள் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் நேற்று தனது அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். இராஜினாமா தொடர்பான கடிதங்களை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அமைச்சர் அஷ்ரப்பைவிட தபால் தொலைத் தொடர்புகள் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் சமூக சேவைகள் பிரதி அமைச்சர் எம். எல். ஏ. எம். முகைதீன் ஆகியோரும் தமது அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்யும் கடிதங்களை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளனர்.

போக்குவரத்து நெடுஞ் சாலைகள் அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் சம்மேளனத்தின் தலைவருமான பௌஸி நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில்: முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான அஷ்ரப்பின் ஆங்கிலவாரப் பத்திரிகைக்கு விடுத்த அறிக்கை தொடர்பாக தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையிலேயே அஷ்ரப்பும் அவரது கட்சியின் ஏனைய இரு பிரதி அமைச்சர்களும் இராஜினாமாச் செய்துள்ளதாகத் தெரிவித்தார்.

அமைச்சர் அஷ்ரப் ஆங்கில வாரப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப்போட்டி

(8 ஆம் பக்கம் பார்க்க

### கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளர் பட்டியல் தயார்

(வவுனியா)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் வன்னி மாவட்டத்தில் முன்னாள் சிவில் நிர்வாக அதிகாரி கே. ஐயம்பிள்ளை தலைமையில் பின்வருவோரை கூட்டணி வேட்பாளர்களாக நிறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது: எம். மங்கள

[8ஆம் பக்கம் பார்க்க]

### தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர்கள்

(மட்டக்களப்பு அலுவலக நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் இம் முறை மூன்று புதிய முகங்கள் தேர்தல் களத்தில் குதிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. முன்னாள் எம்.பி கே. துரைசிங்கம் இம் முறை தேர்தலில் போட்டியிடவில்லை

(8ஆம் பக்கம் பார்க்க)

### வன்னியில் முதல்முறையாக ஈ.பி.டி.பி. அமைப்பு போட்டி

(வவுனியா)

எதிர் வரும் பொதுத் தேர்தலில் ஈ.பி.டி.பி. கட்சியினர் வன்னி மாவட்டத்தில் முதல் முறையாக போட்டியிடவுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஈ.பி.டி.பி. அமைப்பினர் வன்னி மாவட்டத்தில் போட்டி இடுவது தொடர்பாக வவுனியா மாவட்ட

(8ஆம் பக்கம் பார்க்க)

### ஜனநாயக இடதுசாரி முன்னணி யாழ்ப்பாணத்தில் போட்டி

(மட்டக்களப்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஜனநாயக இடதுசாரி முன்னணி யாழ்ப்பாணம் உட்பட நான்கு மாவட்டங்களில் போட்டியிடத் தீர்மானித்துள்ளது.

பொதுத்தேர்தல் தொடர்பாக ஜனநாயக இடதுசாரி முன்னணித் தலைவர் வாசுதேவ நாணயக்கார தகவல் தருகையில் யாழ்ப்பாணம், கேகாலை, இரத்தினபுரி, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் இடதுசாரி முன்னணி போட்டியிடவுள்ளது.

(8ஆம் பக்கம் பார்க்க)

### முன்னாள் யாழ். அரச அதிபர் மாணிக்கவாசகர் காலமானார்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் யாழ். அரச அதிபர் கே. மாணிக்கவாசகர் நேற்று மாரடைப்பால் கொழும்பில் காலமானார் என்ற செய்தியை 'வலம்புரி' மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறது.

மரணமாகும்போது இவருக்கு வயது 56. கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக அரசசேவையில் இணைந்த மாணிக்கவாசகர் சிவில்நிர்வாக சேவையில் நானாட்டான், மன்னார், யாழ்ப்பாணம், கோப்பாய், கண்டி, தம்பலகாமம் ஆகிய பிரதேசங்களில் உதவி அரச அதிபராகக் கடமையாற்றினார். 1989ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டு



வரை கிளிநொச்சி அரச அதிபராகக் கடமையாற்றி

(8 ஆம் பக்கம் பார்க்க

### நேற்று அதிகாலை ஷெல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மூத்த விநாயகர் கோவிலுக்கண்மையில் இரண்டாவது தடவையாக நேற்று அதிகாலை 1.30மணியளவில் ஷெல் ஒன்று வந்து விழுந்து வெடித்ததில் உறக்கத்தில் இருந்தமக்களைத் திகிலடைய

(8 ஆம்பக்கம் பார்க்க )

### மிதி வெடியில் சிக்கினார்

(வவுனியா)

நேற்று முன்தினம்வவுனிக்குளம் பகுதியில் மிதிவெடியில் சிக்கியஇளைஞர்ஒருவர்இடது காலை இழந்துள்ளார்.

முருகவேள ரகு(வயது 25) என்பவரே இடது காலை இழந்த நிலையில் மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந 7)

### தேர்தல் வன்முறையில் ஈடுபட்டோரின் பெயர் பட்டியல் தயாரிக்கப்படும்

(கொழும்பு)

நடைபெற இருக்கும் பாராளுமன்ற பொதுத் தேர்தலை ஒட்டி ''பொலிஸ் தேர்தல் செயலகம்'' அமைக்கப்பட உள்ளதாகவும், தேர்தல் காலங்களில் வன்முறைகள் அதிகரித்தால் இராணுவத்தினரின் உதவி பெறப்படும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### வன்னியில் 2 லட்சத்து 31 ஆயிரம் பேர் வாக்களிப்பர்

(வவுனியா)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வன்னிமாவட்டத்தில் 2லட்சத்து 31ஆயிரத்து 111 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது,

1994ம் ஆண்டைவிட இம் முறை 31 ஆயிரத்து 879

(8 ஆம் பக்கம் பார்க்க)

### தேர்தலில் ஈடுபடப்போவதில்லை சிற்றம்பலம் தெரிவிப்பு

(வவுனியா)

அரசியலில் ஈடுபடும் எண்ணம் எனக்குக கிடையாது. நான் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் வன்னி மாவட்டத்தில் போட்டியிடப்போவதாக வெளிவந்த செய்திகள் ஆதாரமற்றவை என்றும் தாம் தேர்தலில் போட்டியிடப்போவதில்லைஎனவும் சட்டத்தரணி

(8ஆம்பக்கம் பார்க்க)

### சகல தமிழ்க் குழுக்களிடமிருந்தும் ஆயுதங்கள் களையப்பட வேண்டும்

#### வவுனியாவில் ஆனந்தசங்கரி தெரிவிப்பு

( வவுனியா அலுவலக நிருபர் )

தமிழ் மக்கள் பயந்து ஒதுங்குவதை விடுத்து துணிந்து வாக்களிக்க வேண்டும். இதன் மூலம் பெரும்பான்மை ஸ்தானங்களை நாம் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கைப்பற்ற முடியும். எந்தவிதமான அச்சுறுத்தல்களுக்கும் எமது மக்கள் பயப்படத் தேவையில்லை. மக்கள் பலம் எங்களுக்கே என்ற அடிப்படையில் நாம் இந்த தேர்தலில் போட்டியிடுகிறோம். என தமிழர் விடுதலைக் கூட்டணியின் உப தலைவர் வீ. ஆனந்தசங்கரி நேற்றிரவு வவுனியா உள்ளூர் பத்திரிகையாளர் மத்தியில் பேசும் போது தெரிவித்துள்ளார்.

(8-ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சம்பள உயர்வு எதுவும் இதுவரையில் வழங்கப்படவில்லை

## காங்கேசன் ஊழியர் குமுறல்

(யாழ்ப்பாணம்)

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்த பின் அறிவிக்கப்பட்ட எந்த வரவு - செலவுதிட்டத்திலும் எந்தவித சம்பள உயர்வும் வழங்கப்படவில்லை. அரசால் அறிவிக்கப்பட்ட விசேட கொடுப்பனவு 600 ரூபா எமக்கு வழங்காதுவிட சீமெந்துக் கூட்டுத்தாபன இயக்குநர் சபை தீர்மானித்துள்ளது.

இதுவிடயம் தொடர்பாக நாம் மேற்கொள்ளும் போராட்டத்திற்கு தங்கள் கட்சியின் ஆதரவை வேண்டி நிற்கின்றோம்.

இவ்வாறு காங்கேசன் சீமெந்து பொது தொழிலாளர் யூனியன் ஈழமக்கள் ஜனநாயக சட்சி செயலரும் யாழ். மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவிடம் விடுத்த வேண்டுகோளில் தெரிவித்துள்ளனர்.

அவ் வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் பெருந்தொகையான நிதி இறைசேரியில் நிலையான வைப்பில் இடப்பட்டு அதன் வட்டியை நிர்வாகம் பெற்று வருகின்றது.

புத்தளம் சீமெந்துக் கம்பனியில் இருந்து குத்தகையாக பணத்தை பெற்று வருகின்றது.

மரையன் (Marine) சீமெந்துக் கம்பனியில் முதலிடப்பட்ட பங்கின் பங்குலாபத்தை பெற்று வருகின்றது.

லங்கா சீமெந்து நிறுவனத்தில் முதலீடு செய்து வட்டியை பெற்று வருகிறது.

மேற் சொல்லப்பட்ட நான்குவருமானமும் சீமெந்து தொழிற்சாலை இயங்கிய காலத்தில் பெறப்பட்ட வருமானத்தினால் இடப்பட்ட முதலீடுகள் ஆகும். இதில் சகல ஊழியர்களிற்கும் பங்கு உண்டு என்பதே எமது வாதமாகும்.

எனவே கூட்டுத்தாபன பொது நிதியை ஒரு பகுதி ஊழியர்கள் அனுபவிப்பது துரோகமும் அநீதியும் ஆனது இவற்றை எதிர்த்து மறியல் போராட்டம் செய்ய நாம் ஏகமனதாக முடிவெடுத்துள்ளோம்.

இதற்குதங்களின் பரிபூரண ஆதரவை கூட்டுத்தாபன ஊழியர்கள் வேண்டி நிற்கிறார்கள்.

இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## மாணவர்கள் சமுகமளிக்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்கள் அனைவரையும்கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இயங்கும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி அலுவலகத்திற்கு இன்று காலை 9.30 மணிக்கு சமுகமளிக்குமாறு பீடாதிபதி கேட்டுக் கொள்கின்றார். [க]

## றொக்கற் தாக்குதல்

(வடமராட்சி கிழக்கு)

தென்மராட்சியையும், வடமராட்சியையும் இணைக்கும் கண்டல் காட்டுப் பகுதிகளை நோக்கி மூன்று உலங்கு வானூர்திகள் நேற்று காலை 5.00 மணியளவில் றொக்கற் தாக்குதல்களைநடத்தியுள்ளன. சு-43]

## பருத்தித்துறை பிரதேச சபை

# கேள்வி அறிவித்தல்

அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளை நிறைவேற்றுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கக்கூடிய ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் இதற்கான தகுதியினை உரிய அதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கக் கூடிய அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களிடமிருந்தும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கான கேள்விப்படிவங்களை பின்வரும் விகிதங்களில் வைப்புப் பணத்தையும் படிவப்பணத்தையும் செலுத்தி 05-09-2000 பி. ப. 3-30 மணி வரை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகள் 06-09-2000 திகதி நண்பகல் 12-00 வரை ஏற்றுக்கொள்ளப்படும். 06-09-2000 திகதி பி. ப. 1-30 மணிக்குத் திறக்கப்படும். 01 தொடக்கம் 09 வரையான வேலைகளுக்கு ஒரு ஒப்பந்தகாரர் அல்லது ஒரு சங்கம் மூன்று கேள்விகள் மட்டுமே சமர்ப்பிக்க முடியும்.

| வேலை விபரம் | மீளளிக்கப்படாத கட்டணம் | மீளளிக்கக்கூடிய வைப்பு |
|---|---|---|
| 1. குரும்பைகட்டி வீதி புனரமைத்தல் | 100-00 | 3,500-00 |
| 2. சுண்டங்கி வீதி | 100-00 | 4,000-00 |
| 3. போதரவுமட வீதி | 100-00 | 3,600-00 |
| 4. குடத்தனை வடக்கு வீதி | 100-00 | 4,500-00 |
| 5. திக்கம் வவுணில் வீதி | 100-00 | 3,500-00 |
| 6. கெருடாவில் மாதர் சங்க வீதி | 100-00 | 3,500-00 |
| 7. கூவில் வீதி | 100-00 | 3,000-00 |
| 8. திகிரி வீதி | 100-00 | 3,000-00 |
| 9. திக்கம் மாறாம்புலம் வீதி | 100-00 | 1,400-00 |
| **சபை நிதி வேலைகள் :** | | |
| 1. காரியாலய உள்ளக கண்ணாடி அறை அமைத்தல் | 100-00 | 500-00 |
| 2. பொலிகண்டி அம்பிகை ச. ச. நிலைய குழாய்க்கிணறு திருத்தல் | 100-00 | 200-00 |
| 3. வல்லியானந்தம் தெற்கு வீதி அமைத்தல் | 100-00 | 1,250-00 |
| 4. தட்டாதெரு ஒழுங்கை புனரமைப்பு | 100-00 | 1,000-00 |
| 5. உருத்திரர்வத்தை பாடசாலை வீதி புனரமைத்தல் | 100-00 | 1,000-00 |

கேள்விகள் யாவும் அரக்குமுத்திரை இடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்பட்டு தலைவர் பருத்தித்துறைப் பிரதேசசபை புலோலி என்ற முகவரிக்கு பதிவஞ்சல்மூலமோ அல்லது சபையின் கேள்விப்பெட்டியில் சேர்ப்பதன் மூலமோ குறித்த திகதியின் முன்னர் கிடைக்கச்செய்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான விடயங்களில் கேள்விச் சபையின் முடிவே இறுதியானதாகும். மேலதிக விபரங்களைக் காரியாலய நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

பருத்தித்துறை பிரதேசசபை,
தலைமை அலுவலகம், புலோலி.
21-08-2000.

ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் ஜே. பி. யூ. எம்.
தலைவர், பருத்தித்துறை பிரதேசசபை.
(கி-729)

## இவருக்கு உதவுங்கள்



சாவகச்சேரி மீசாலையைச் சேர்ந்த ஒரு குழந்தையின் தாயான திருமதி சுபாசினி நகுலேந்திரன் இருதய நோய்க்கு ஆளாகியுள்ளார். இவரது உயிரைக் காப்பாற்ற வேண்டுமாயின் உடனடியாக இவருக்கு இருதய மாற்று சிகிச்சை செய்ய வேண்டுமென சென்னை மெடிக்கல் மிசன் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இச் சிகிச்சைக்கு எட்டு லட்சம் இலங்கை ரூபா தேவைப்படுகிறது. பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள இவரது குடும்பத்தால் இத்தொகையினைப் பெற முடியாதுள்ளது.

எனவே இப் பெண்ணின் உயிரைக் காப்பாற்ற சாவகச்சேரி லயன்ஸ் கழகம் முன்வந்துள்ளது.

பரோபகார மனம் படைத்தவர்கள் தமது நிதி உதவியை இலங்கை வங்கி சாவகச்சேரி கிளையிலுள்ள 16524 கணக்கிலக்கத்திற்கு (தற்போது பருத்தித்துறையில் இயங்குகிறது) அனுப்பி வவத்து அதுபற்றி இலக்கம் 75, கோவில் வீதி. யாழ்ப்பாணத்திலுள்ள அலுவலகத்திற்கு அறியத்தந்து இளந் தாயின் உயிரைக் காப்பாற்ற உதவுமாறு சாவகச்சேரி லயன்ஸ் கழகம் கேட்டுள்ளது. (ஆ-ர்

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

ஆகஸ்ட் மாதம் 22-ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவுரீதியாகத் தரப்படுகின்றது.

யாழப்பாணம்

| | |
|---|---|
| 145378 ஏ | 149843 ஏ |
| 150037 ஏ | 150234 ஏ |
| 150234 பி | 150246 ஏ |
| 150246 பி | 150246 சி |
| 150263 ஏ | 150263 பி |
| 150268 சி | 150263 டி |
| 150284 ஏ | 152500 ஏ |
| 152500 பி | 154024 ஏ |
| 154024 பி | 154024 சி |
| 154024 டி | 154058 ஏ |
| 154058 பி | 154058 சி |
| 154149 ஏ | 154149 பி |
| 154149 சி | 154224 ஏ |
| 154257 ஏ | 154257 பி |
| 154277 ஏ | 154277 பி |
| 154277 சி | 154277 டி |
| 156189 ஏ | 156189 பி |
| 156189 சி | 156189 டி |
| 156190 ஏ | 156190 பி |
| 156266 ஏ | 156266 பி |
| 156266 சி | 156266 டி |
| 156275 ஏ | 156275 பி |
| 156275 சி | 156275 டி |
| 156275 ஈ | 156275 எவ் |
| 156290 ஏ | 156290 பி |
| 156346 ஏ | 156346 பி |
| 156347 ஏ | 156347 பி |
| 156347 சி | 156365 ஏ |
| 156365 பி | 156426 ஏ |
| 156466 ஏ | 156466 பி |
| 156466 சி | 156466 டி |
| 156574 ஏ | 156620 ஏ |
| 158999 ஏ | 159020 ஏ |

| | |
|---|---|
| 144966 ஏ | 144975 ஏ |
| 144975 பி | 144975 சி |
| 144984 ஏ | 144997 எ |
| 144997 பி | 145297 எ |
| 145365 ஏ | 145367 எ |
| 145368 ஏ | 145501 எ |
| 145580 ஏ | 145606 எ |
| 145616 ஏ | 145657 எ |
| 145659 ஏ | 145661 எ |
| 145726 ஏ | 154354 எ |
| 156693 ஏ | 156802 எ |
| 156802 பி | 157106 எ |
| 157108 ஏ | 120774 எ |
| 144713 ஏ | 144713 பி |
| 150009 ஏ | 150009 பி |
| 150031 ஏ | 150031 பி |
| 150031 சி | 150031 எ |
| 150221 பி | 155276 எ |
| 152449 ஏ | 152449 பி |
| 153057 ஏ | 154075 எ |
| 154122 ஏ | 154122 பி |
| 154127 ஏ | 154139 எ |
| 154161 ஏ | 154166 எ |
| 154166 பி | 154166 சி |
| 154171 ஏ | 154171 பி |
| 154234 ஏ | 154234 பி |
| 154234 சி | 154234 டி |
| 154472 ஏ | 154282 ஏ |
| 154282 பி | 154282 சி |
| 154282 டி | 154282 ஈ |
| 156203 ஏ | 156203 பி |
| 156270 ஏ | 156270 பி |
| 156270 சி | 156317 ஏ |
| 156317 பி | 156317 சி |
| 156317 பி | 156317 ஈ |
| 156624 ஏ | |

கோப்பாய்

| | |
|---|---|
| 144752 ஏ | 144906 ஏ |
| 144907 ஏ | 144907 பி |
| 144908 ஏ | 144908 பி |
| 144978 ஏ | 144978 பி |
| 144986 ஏ | 144986 பி |
| 144986 சி | 144986 டி |
| 144988 ஏ | 144998 ஏ |
| 144998 பி | 145224 ஏ |
| 145229 ஏ | 154295 ஏ |
| 154295 பி | 154307 ஏ |
| 154307 பி | 154307 சி |
| 154337 டி | 154321 ஏ |
| 154379 ஏ | 154379 பி |
| 154381 ஏ | 154381 பி |
| 154381 சி | 154388 ஏ |
| 154388 பி | 154406 ஏ |
| 154437 ஏ | 154437 பி |
| 154459 ஏ | 156801 ஏ |
| 156801 பி | 149894 ஏ |
| 149894 பி | 149894 சி |
| 149895 ஏ | 149895 பி |
| 149913 ஏ | 149913 பி |
| 149913 சி | 152339 ஏ |
| 152486 ஏ | 152486 பி |
| 156471 ஏ | 158993 ஏ |

நல்லூர்

| | |
|---|---|
| 144764 ஏ | 144778 ஏ |
| 144807 ஏ | 144807 பி |
| 144814 ஏ | 144858 ஏ |
| 144905 ஏ | 144905 பி |
| 144917 ஏ | 144930 ஏ |
| 144930 பி | 144964 ஏ |

பருத்தித்துறை

156694 ஏ

உடுவில்

| | |
|---|---|
| 134280 ஏ | 134280 பி |
| 134280 சி | 134280 டி |
| 144951 ஏ | 144952 பி |
| 144970 ஏ | 144970 பி |
| 144970 சி | 144970 டி |
| 144970 ஈ | 144995 ஏ |
| 144995 பி | 144996 ஏ |
| 144996 பி | 145492 ஏ |
| 156822 ஏ | 156822 பி |
| 156840 ஏ | 156847 ஏ |
| 156849 ஏ | 156849 பி |
| 157651 ஏ | 157651 பி |

(சு)

## நேரமாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் நல்லூர் கிளை நூலக சேவை நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக நூலகர் அறிவித்துள்ளார்.

புதிய நேர அட்டவணையின் பிரகாரம் திங்கள் முதல் வெள்ளிவரை காலை 8. 30 மணி முதல் பிற்பகல் 4. 45 வரை நூலகம் திறந்திருக்கும் சனிக்கிழமைகளில் காலை9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரையும் வாசகர்களுக்காக திறந்திருக்கும்.

ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் மூடப்பட்டிருக்கும். முன்னர் திங்கள் விடுமுறை தினமாக கடைப்பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது இதேவேளை யாழ்ப்பாணம் பொதுசன நூலகமும் இயங்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (செ-106)

# இலங்கை இனப் பிரச்சினை குறித்து!

# ஜப்பானிய அதிகாரிகள் குழு ஆராய்வு

(கொழும்பு)

ஜப்பானிய உயர் அதிகாரிகள் குழுவொன்று, நேற்று முன்தினம் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்காவைச் சந்தித்து இலங்கை இனப்பிரச்சினை மற்றும் அதற்கான தீர்வு குறித்து கலந்துரையாடியதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

ஜப்பானியப் பிரதமர் ஜசிரோ மோரியின் விசேட தூதுவராக இலங்கை வந்துள்ள ஜப்பானின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான கோசே மெறோட்டா மற்றும், ஜப்பானிய உயர் அதிகாரிகள் குழுவொன்றே ஜனாதிபதியைச் சந்தித்து பல விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளனர்.

இக்கலந்துரையாடலின் போது, நாட்டின் அரசியல், பொருளாதாரம், இன நெருக்கடி, அதற்கான தீர்வுகள் குறித்து ஜனாதிபதி இக் குழுவுக்கு விளக்கம் அளித்ததாகவும் வெளிவிவகார அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜப்பானியப் பிரதமரினால் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதம் ஒன்றினையும் விசேட தூதுவர் இச் சந்தர்ப்பத்தில் கையளித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை இனப்பிரச்சினை மற்றும் பிற விடயங்கள் குறித்து ஆராய்வதற்கென அமெரிக்க அதிகாரிகள் குழுவொன்று இலங்கை வரவுள்ளதாக இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## சத்திர சிகிச்சை நிபுணர் கொழும்பு பயணமானார்

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனா வைத்திய சாலை சத்திர சிகிச்சைப் நிபுணர் டாக்டர் எஸ். ரவிராஜ் நேற்று கொழும்பு பயணமானார்.

இவர் சத்திர சிகிச்சை தொடர்பான வெளிநாட்டு அனுபவங்களை கற்றுக் கொள்வதற்காக அவுஸ்ரேலியா சென்று ஒரு வருட பயிற்சிபெறவுள்ளார்.

பயிற்சியை பெற்று திரும்பியதும் யாழ். மருத்துவமனையில் சத்திர சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றுவார். (உ)

# திருமலைநகரம் கப்பல்சேவை கட்சிகள் கைக்கு மாறக்கூடாது

## - ரெலோஇயக்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

செஞ்சிலுவை வழித்துணையுடன் இடம்பெறும் ''திருமலை நகரம்'' கப்பல் சேவையை வரவேற்கும் அதேவேளை அரசியல்கட்சிகளின் கைகளுக்கோ அல்லது கட்சியின்சிபார்சுபெற்ற ஒரு தனியார் நிறுவனத்திற்கு கைமாறுவதை அனுமதிக்கக் கூடாது.

'ரெலோ' இயக்கம் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தொடர்ந்துகொண்டு இருக்கும் கொடூரயுத்தத்தால் அடைக்கப்பட்ட சிறைக்குள் சிக்கித்தவிப்பவர்கள் போல் யாழ். குடாநாட்டு மக்கள் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். தென்இலங்கையும், யாழ்ப்பாணமும் வெவ்வேறு நாடுகளைப் போல் காட்சியளிக்கின்றன.

உதாரணமாக பிரயாண விடயத்தை எடுத்துக்கொண்டால் குடாநாட்டிலிருந்து பல்வேறு தேவைகளுக்காக கொழும்புக்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் பிரயாணம்மேற்கொள்ள இருப்பவர்கள் பெரும்சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

குறிப்பாக பிரயாண சீட்டுக்களைப் பெறுவதில் நூற்றுக்கணக்கான மக்கள் சிவில் காரியாலயம் முன் உணவு, குடிதண்ணீர் போன்ற வசதிகள்கூட இல்லாதநிலையில் பலமணிநேரம் முண்டியடித்து காத்துக்கிடந்து ஏமாற்றத்துடன் திரும்பு நிலையும் உள்ளது.

பிரயாணச்சீட்டைப் பெற்றவர்கள் பலமணிநேர கடல் பிரயாணத்தில் கடலில் என்ன நடக்குமோ என்ற அச்சத்துடன் உயிரைக் கையில்பிடித்துக்கொண்டு செல்லும் பரிதாபநிலையும் தோன்றியுள்ளது.

தேர்தல்காலம் நெருங்கி வருவதால் கட்சிகள் தங்கள் சொந்தப்பாவனைக்கு உபயோகப்படுத்தி தங்கள் உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் ஏற்றி இறக்குவதுடன் வியாபார நோக்கத்திற்காகவும் பயணிகள்கப்பலை பயன்படுத்த நிறையவாய்ப்புக்கள் உண்டு.

இதனால் ஏனையகட்சிகளுக்கும் மக்களுக்கும் பல சங்கடங்கள் ஏற்படலாம், அத்துடன் ஒருகட்சிக்கோ அல்லது கட்சிசார்ந்த நிறுவனத்திற்கோ கப்பலைகையளிக்க கப்பல்உரிமையாளர்கள் முன்வரக்கூடாது.

கப்பல்கைமாறும் பட்சத்தில் மக்கள் ஒரளவேனும் நிம்மதியாக பிரயாணம் மேற்கொள்ளமுடியாது. சர்வதேச செஞ்சிலுவைசங்கமும் வழித்துணைசெய்ய முன்வராது கடந்தபல வருடங்களுக்குமுன்பு ஐரிஸ்மோனா கப்பலுக்கும் மாலுமிகளுக்கும் என்னநடந்தது என்பதை அரசுஉணரவேண்டும். கப்பல் கைமாறும்பட்சத்தில் கப்பலுக்கு போதியபாதுகாப்பு இல்லைஎன்பதையும் கருத்திற்கொள்ள வேண்டும்.

மேற்கண்டவாறு அவ்அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# கிழக்கு பல்கலைக்கழக மாணவர் நேற்று பகிஷ்கரிப்பில்ஈடுபட்டனர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் சித்தாண்டி, கொம்மாந்துறை, வந்தாறுமூலை ஆகிய இடங்களில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் படுகொலைகளைக் கண்டித்து கிழக்குபல்கலைகழக மாணவர்கள் நேற்று வகுப்புப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

அத்துடன் காலை 8.30 மணிமுதல் 2 மணிநேரம் பல்கலைக்கழகவாயிலில் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

நூற்றுக்கணக்கான பல்கலைமாணவர்கள் ஒன்றுகூடி படுகொலைகளைக் கண்டிக்கும்வகையிலான கோஷங்களை எழுப்பினர்.

இம்மாதம் 9 ஆம் திகதி தலைதுண்டிக்கப்பட்டு மிகவும் கொடூரமானமுறையில் சித்தாண்டி இளம்குடும்பஸ்தர் கொல்லப்பட்டமை, 18 ஆம்திகதி களுவங்கேணிப் பகுதி உயர்தரவகுப்பு மாணவன் சுட்டுக்கொல்லப்பட்டமை, 20 ஆம்திகதி கொம்மாந்துறையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் விவசாயிஒருவர் கொல்லப்பட்டமை ஆகியசம்பவங்களைக்கண்டித்தே இம்மாணவர் போராட்டம் நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (உ)

### ஸ்ரீலங்கா கடற் படைக்கு

# விமானப் பிரிவு அமைக்கும்பணிகள் துரித கதியில் முன்னெடுப்பு

ஸ்ரீலங்கா கடற்படையில் விமானப்பிரிவை அமைக்கும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக கடற்படைத்தலைமைப் பீடம் தெரிவித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இதற்கென இந்தியாவில் இருந்து. ஐ.எம்.எஸ்.சர்தார் என்ற மூன்று உலங்குவானூர்திகளைக் காவிச் செல்லும் வல்லமை கொண்ட கடலோர ரோந்துக் கப்பலொன்றும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், விமானப்படை முன்னாள் அதிகாரிகள், மற்றும் தேர்ச்சி பெற்ற விமானிகள் ஆகியோரின் ஆலோசனைகள் பெறப்பட்டும், அவர்களில் பலரை மீள சேவைக்கமர்த்தும் பணியிலும் கடற்படை தலைமைப்பீடம் அவசர அவசரமாக ஈடுபட்டுவருகிறது.

இதேவேளை, கடற்படையில் விமானப்பிரிவை அமைக்கும் முயற்சிக்கு இலங்கை விமானப்படை வட்டாரங்களில் முன்பு எதிர்ப்பு நிலவிய போதும், தற்போது அது சீர்செய்யப்பட்டிருப்பதாகவும் அவ் வெளிநாட்டு ஊடகச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

### யுத்த அனர்த்தத்தால்

# இடம்பெயர்ந்தநவீல்ட்பாடசாலையில் உபகரணத்திற்கு நிதி ஒதுக்கவும்

## மேலதிகமாகாண கல்விப்பணிப்பாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யுத்தஅனர்த்தத்தால்இடம்பெயர்ந்த நவீல்ட் பாடசாலைக்கு தேவையான உபகரணத்துக்கான நிதி உதவியை வழங்குமாறு யாழ்ப்பாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்ச.நா.தணிகாசலம்பிள்ளை கோரிக்கைவிடுத்தார்.

யாழ்.செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன், வடக்கு-மாகாண பிரதம செயலாளர் ஜி.கிருஷ்ணமூர்த்தி மற்றும் ஏனைய செயலாளர்கள், பிரதேச செயலர்கள் கலந்துகொண்டகூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஐந்துவலயங்களுக்குமான வாகனவசதிகள் செய்துதரப்பட வேண்டும்.

திருமலையில் உள்ளது போன்றுயாழ்ப்பாணத்திலும் கேட்போர் கூடம்அமைத்துத் தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளார். (க-3)

# மூலப்பொருட்கள் பெறுவதில் சிரமம் தொழிற்றுறை திணைக்களம் திண்டாட்டம்

[யாழ்ப்பாணம்]

சுன்னாகத்தில் இயங்கும் வடக்கு கிழக்குமாகாணசபை தொழிற்றுறை திணைக்களம் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு மூலப்பொருட்களைப் பெறுவதில் பலத்த சிரமத்தை எதிர்நோக்கியுள்ளது.

தற்போது நிகழ்ந்த யுத்த சூழ்நிலையைத் தொடர்ந்து கொழும்புத்துறை, பளை ஆகிய பகுதிகளுக்கு சென்று மூலப் பொருட்களைபெற்றுக் கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது இதன் காரணமாக தும்புத்தொழில் மற்றும் விளக்குமாறு உற்பத்திகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்திய இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்டிருந்த இக்கட்டடம் கடந்த வருடம் டிசம்பர் பகுதியில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பினரால் புனரமைக்கப்பட்டு தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

14வயதிற்கும் 30வயதிற்கும் இடைப்பட்டவர்கள் ஆகக்கூடியது 8ஆம்வகுப்பு வரைபடித்தோர்இத்திணைக்களத்தில் பயிற்சிக்காக சேர்க்கப்படுகின்றனர். இவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூபா 30வரை சம்பளமாக வழங்கப்படுகின்றது. (க-12)

## பாம்புக்கடிக்கு இலக்கானார்

(மந்துவில்)

பாம்புக்கடிக்கு இலக்காகிய நபர் மந்திகைமருத்துவ மனையில்அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துன்னாலை தெற்கைச் சேர்ந்த ஆனந்தமூர்த்தி என்பவரே பாம்புக்கடிக்கு இலக்காகியவராவார். (க-39)

## இராசி பலன்

23-8-2000

(ஆவணி 7 புதன்)

அட்டமி

மு.ப 8.33 வரை

ரோகினி பி.இ 3 46 வரை

இராகுகாலம்

12. 05- 1.35

சுபநேரம்

4.35- 6.05

ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி

**மேடம்**
செய்தொழில் விருத்தியின்மை, நியாயம் பேசல், வியாதி.

**இடபம்**
நல்ல காரியம், தெய்வ நம்பிக்கை, பொருள் வரவு, சிறு ரோகம்.

**மிதுனம்**
பிரயாணம், முயற்சி தாமதம், பொருள் செலவு, சயன சுகக்குறை.

**கடகம்**
பணவரவு, கீர்த்தி, சுப காரியம், மனக்கிலேசம்.

**சிங்கம்**
இடம்மாற்றம், மேன்மை, உஷ்ணரோகம், பணச்செலவு

**கன்னி**
காரியநட்டம், பிரயாணம் மனப்பயம், சிறுவருமானம்.

**துலாம்**
அலைச்சல், மனக்கிலேசம், பணச் செலவு, வீண்கலகம்.

**விருச்சிகம்**
பிரயாணம் சுகம், விருந்துண்ணல், உல்லாசம், பண வரவு.

**தனு**
மகிழ்ச்சியான சம்பவம், இடமாற்றம், புதியமுயற்சி.

**மகரம்**
மனஸ்தாபம், ஆரோக்கியக் குறை, முயற்சி தாமதம், புத்திரர்களால் கவலை.

**கும்பம்**
உடல் நல சுகம், தெய்வ அனுகூலம், உறவினர் குறை கேட்டல்.

**மீனம்**
பிரயாண சுகம், சகோதரர் வழி உறவு, பொருள்வரவு, காரியம் வெற்றி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரணதர) மாதிரிப் பரீட்சை - 2000

## பகுதி I மாதிரி வினாத்தாள் 2

மேஜா பஞ்சலிங்கம்

கவனிக்க : (1) எல்லா வினாக்களுக்கும் விடை தருக

(2) விடைகளுள் சரியானது அல்லது மிகப் பொருத்தமானது என நீர் கருதும் ஒரு விடையைத் தெரிவு செய்க.

(3) நேரம் ஒரு மணித்தியாலங்கள்

01) மனிதனின் உடலில், ஒட்டுக்கற் பிரிவினால் பிரிவடையும் கலங்கள் எங்கு காணப்படும்?
(1) ஆறும் புண்ணில் (2) தோலின் மேற்பரப்புக் கலங்களில்
(3) வித்து தாய் கலங்களில் (4) வளரும் நகத்தில்

02) பின்வரும் கூற்றுக்களில் பிழையான கூற்று:
(1) சில வேளைகளில் ஒளி முறிவடைந்து செல்லும்;
(2) ஒளி ஒரு சக்தி (3) ஒளி ஒரு சக்தி முதல்
(4) ஒளி நேர்கோட்டில் செல்லும்.

03) குவிவு வில்லை ஒன்றில் மாய விம்பம் உண்டாகிறதாயின் பொருள் வைக்கப்பட்ட இடம்;
(1) f க்கும் 2 f க்கும் இடையே (2) 2 f க்கு அப்பால்
(3) 2 f இல் (4) f க்கும் வில்லைக்கும் இடையில்

04) பின்வருவனவற்றில் வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டின் அளவை குறைப்பதற்கு காரணமாவது எது?
(1) சுவாசித்தல் (2) ஒளிச்சேர்க்கை
(3) ஆவியுயிர்ப்பு (4) மதுசாரம் நொதித்தல்

05) ஒரு சோதனைக் குழாயினுள் உள்ள செங்கபில நிற நைதரசனீரொட்சைட்டின் நிறத்தை கூட்ட என்ன செய்ய வேண்டும்?
(1) அமுக்கத்தைக் குறைத்தல் அல்லது வெப்பநிலையைக் கூட்டல்
(2) அமுக்கம் கூட்டல் அல்லது வெப்பநிலையைக் குறைத்தல்
(3) அமுக்கம், வெப்ப நிலையைக் கூட்டல்
(4) அமுக்கம், வெப்பநிலையைக் குறைத்தல்

06) சூடாக்குகையில் வாயுவை மாத்திரம் வெளிவிட்டபடி பிரிகையடையும் நைத்திரேற்று பின்வருவனவற்றுள் எது?
(1) செப்பு நைத்திரேற்று (2) பொற்றாசியம் நைத்திரேற்று
(3) மக்னீசியம் நைத்திரேற்று (4) ஈயநைத்திரேற்று

07) 10 கிராம் கல்சியம் காபனேற்றில் அடங்கியுள்ள கல்சியம் காபனேற்று மூல் அளவு
( கல்சியம் = 40, காபன் = 12, ஒட்சிசன் = 16 )
(1) 10.0 (2) 1.0 (3) 0.1 (4) 0.01

08) ஒலியின் உரப்பை அதிகரிப்பதற்காக ஒலி அலையின்:
(1) வீச்சத்தை அதிகரித்தல் (2) மீடிறனை அதிகரித்தல்
(3) அலைவு நேரத்தை அதிகரித்தல் (4) அலை நீளத்தை அதிகரித்தல்

09) மனிதக் குருதிச் சுற்றோட்டத் தொகுதியின் எந்த நாளத்தில் ஒட்சியேற்றப்பட்ட குருதி அடங்கியிருக்கும்?
(1) நுரையீரல் நாளம் (2) முற் பெருநாளம்
(3) ஈரல் வாயி நாளம் (4) பிற் பெரு நாளம்

10) 15 N எனக் குறிப்பிடப்பட்டுள்ள ஓர் அணு தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் உண்மையான கூற்று யாது?
(1) அணு எண் 7, புரோத்தன் எண்ணிக்கை 7
(2) திணிவு எண் 15, நியூத்திரன் எண்ணிக்கை 7
(3) திணிவு எண் 7, இலத்திரன் எண்ணிக்கை 15
(4) அணு எண் 15, திணிவு எண் 7

11) வளியில் சூடாக்கப்படும் போது நிறமுடைய வாயுவை வெளிவிடும் சேர்வை எது?
(1) சோடியம் இருகாபனேற் (2) செப்பு சல்பேற்

# பாசையூர் கொழும்புத்துறைப் பகுதியில் கடற்றொழிலில் ஈடுபடபின்னடிப்பு

(சுண்டுக்குளி)

யாழ்.பகுதியில் நிலவும் தற்போதைய சூழ்நிலையில் பாசையூர் மற்றும் கொழும்புத்துறை கடற்றொழிலாளர் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு பெரிதும் பின்னடித்து வருகின்றனர்.

யாழ். பகுதியில் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கிய போதிலும் கூட இவர்கள் பின்னடித்து வருகின்றனராம்.

இப் பகுதியில் அடிக்கடி ஷெல்கள் வீழ்ந்து வெடிப்பதில் கடற்தொழிலாளர் தம் தொழிலை மேற்கொள்ள முடியாதுள்ளதாக தொழிலாளர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

# மாயமாக மறைந்த சைக்கிள் மீண்டும் உரிமையாளரிடம் வந்தது

(மந்துவில்)

மாயமாக மறைந்த துவிச்சக்கரவண்டி மீண்டும் உரிமையாளரிடமே வந்துசேர்ந்தது.

துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த சிவராசா என்பவருடைய சைக்கிள் அண்மையில் அவருடைய வீட்டில்திருட்டுப் போயிருந்தது.

திருட்டுப்போன மூன்றாம் நாள், திருடிய நபர் மனம் மாறிய நிலையில் உரிமையாளரிடம் துவிச்சக்கரவண்டியை ஒப்படைத்துள்ளார்.

இச்செயல் அப்பகுதி மக்களிடையே பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

(உ-39)

# மீன்சந்தை திறந்து வைப்பு

(புலோலி)

சுமார் 40 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பருத்தித்துறை நகரசபை புதிய மீன்சந்தை நேற்று முன்தினம் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

பருத்தித்துறை நகரசபை தலைவர் வின்சன்ட்கெனடி மேற்படி சந்தையை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார்.

பருத்தித்துறை நகரசபை செயலாளர் தலைமையில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா, யாழ்.பல்கலைக் கழக பேரவை உறுப்பினர் சட்டத்தரணி ஆர்.உருத்திரா, பருத்தித்துறை நகரசபை முன்னாள் செயலர் என்.சோமசுந்தரம், பருத்தித்துறை பிரதேச செயலக உதவித்திட்டப்பணிப்பாளர் என்.மகேந்திரன், பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ப.விக்னேஸ்வரன் உட்படபிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

சாவகச்சேரிபிரதேசசபைத் தலைவர் அன்ரன் பொன்னையாவும் மீன் வியாபாரிகளி

# கலாசாலை மாணவர்க்கு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவர் அனைவரையும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு ப. 11.00 மணிக்கு கலாசாலைக்கு தவறாது சமுகம் தரும்படி உப அதிபர் கேட்டுள்ளார்.

(உ)

# நிவாரணம் வழங்கல்

(மானிப்பாய்)

ப.நோ.கூ. சங்கக்கிளைகள் மூலம் இடம்பெயர்ந்தவர்களுக்கான உலர் உணவு நிவாரணம் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

இம் முறை நிவாரணத்திற்கு நாட்டரிசி, உடையல் பச்சை, மைசூர் பருப்பு, சீனி, ஹைலண்ட் பால்மா என்பன வழங்கப்படுகின்றது.

(க-120)

# கலாசாலைக்கு தெரிவான மாணவருக்கு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு தெரிவாகி அண்மையில் பெயர் விபரங்கள் வெளியான அனைவரையும், 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு தவறாது சமுகம் தந்து தத்தமது அனுமதிக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கலாசாலை உப அதிபர் தெரிவித்துள்ளார்.

(உ)

11) வளியில் சூடாக்கப்படும் போது நிறமுடைய வாயுவை வெளிவிடும் சேர்வை எது?
(1) சோடியம் இருகாபனேற் (2) செப்பு சல்பேற்
(3) பொற்றாசியம் பரமங்கனேற் (4) ஈயநைத்திரேற்

12) தாவரக் கலத்தையும் விலங்குக் கலத்தையும் நுணுக்குக்காட்டியினூடாக நோக்கும் போது பின்வரும் எப்பகுதியில் வேறுபாட்டை காணலாம்?
(1) கரு (2) பரம்பரை அலகுகள் (3) கலச்சுவர் (4) முதலுருமென்சவ்வு

13) ஒருவரிடம் செவிட்டுத் தன்மை உண்டாவதில் பின்வரும் காரணிகளில் எதுகூடிய செல்வாக்கு செலுத்துகிறது
(1) புறச் செவி சிறிதாக இருத்தல்
(2) செவிப்பறை மென்சவ்வு சேதமடைந்திருத்தல்
(3) செவிப்பறை மென்சவ்வு தடித்திருத்தல்
(4) நடுச்செவியின் சிற்றென்புகள் தடித்திருத்தல்

14) பின்வருவன வற்றில் எது பரபரிவு நரம்புத் தொகுதியின் செயற்பாடன்று?
(1) இதயத் துடிப்பு கதியைக் குறைத்தல் (2) நாடிவிரிதல்
(3) கண்ணின் ஜரிசை விரியச் செய்தல் (4) கண்ணீர் வடிதல்

15) விஞ்ஞானத்திலே மாறும் இயல்பை எடுத்துக் காட்டப் பின்வருவன வற்றில் எது பொருத்தமானது?
(1) டோல்ரன் அணுக் கொள்கை (2) ஆக்கிமிடீஸின் கோட்பாடு
(3) ஓமின் விதி (4) பிளெமிங்கின் வலக்கை விதி

16) பின்வருவன வற்றுள் நிலக்கீழ் தண்டு
(1) வத்தாளைக் கிழங்கு (2) மரவள்ளிக் கிழங்கு
(3) உருளைக் கிழங்கு (4) கரட் கிழங்கு

17) அயடீன் குறைபாட்டினால் உருவாகும் குறைபாட்டு நோய்?
(1) நீரிழிவு (2) தொண்டைக் கழலை (3) சரும நோய் (4) இருதய நோய்

18) உணவுப் பாதை உடன் தொடர்புடைய மிகப் பெரிய சுரப்பி?
(1) சதையம் (2) பித்தப்பை (3) ஈரல் (4) உமிழ் நீர்சுரப்பி

19) குரோமியத்தை நேரடியாக இரும்பில் முலாமிட ஒருவர் எத்தனித்தார்?
(1) சரியான முயற்சி (2) முலாமிட முடியாது
(3) முலாமிட முடியும் (4) நீண்ட முயற்சி

20) A என்னும் மூலகத்தின் குளோரைட்டின் சூத்திரம் Cl ஆகும். X இன் ஒட்சைட்டின் இயல்தகவு மிக்க சூத்திரம்
(1) $XO_3$ (2) $X_3O$ (3) $X_2O$ (4) $X_3O_2$

யாவும் மீன் வியாபாரிகளிடம் மீன்கொள்வனவு செய்து மீன்வியாபாரத்தை ஆரம்பித்துவைத்தனர். (க-43-52)

## குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் அலரி விதை உட்கொண்ட குடும்பஸ்தர் ஒருவர் மரணமாகியுள்ளார்.

எழுதுமட்டுவாள்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து சங்கானையில் வாசித்து வந்த கனகசபை கனகலிங்கம் (வயது 55) என்பவரே இவ்வாறு மரணமானவராவார். (க-12)

## 17-ம் 18-ம் திகதிகளில் பிரசுரிக்கப்பட்ட விஞ்ஞானம் பகுதி 1க்கான விடைகள்

| | | |
|---|---|---|
| 01) 4 | 02) 2 | 03) 3 |
| 04) 4 | 05) 4 | 06) 1 |
| 07) 2 | 08) 2 | 09) 2 |
| 10) 4 | 11) 2 | 12) 4 |
| 13) 3 | 14) 2 | 15) 1 |
| 16) 3 | 17) 2 | 18) 4 |
| 19) 2 | 20) 1 | 21) 1 |
| 22) 3 | 23) 1 | 24) 3 |
| 25) 3 | 26) 3 | 27) 4 |
| 28) 2 | 29) 3 | 30) 2 |
| 31) 3 | 32) 4 | 33) 4 |
| 34) 2 | 35) 4 | 36) 3 |
| 37) 2 | 38) 4 | 39) 1 |
| 40) 4 | | |

## நாய்களுக்கு தடுப்பூசி

(மானிப்பாய்)

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு இன்றும், நாளையும் பின்வரும் இடங்களில் வைத்து ஏ.ஆர்.வி. தடுப்பூசி ஏற்றப்படுமென்று மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் இன்று காலை 9 மணி முதல் 10 மணி வரை மானிப்பாய் சோதி வேம்படி காளிகோவிலுக்கு அருகாமையில் 10.30 மணி முதல் 11 மணி வரை உச்சியோடை வளர்மதி ச.ச. நிலையத்திலும் 12.00 தொடக்கம் 1.00 மணி வரை கட்டுடை திருவள்ளுவர் ச.ச. நிலையத்திலும் இடம் பெறும்.

இன்று காலை 9 மணி முதல் 10 மணி வரை சுதுமலை வடக்கு ஈஞ்சடி வைரவர் கோவிலடி ச.ச. நிலையத்திலும் 10.30 மணி தொடக்கம் 11.30 மணி வரை சாவல்கட்டு மகாத்மா ச.ச. நிலையத்திலும் 12 மணி தொடக்கம் 1 மணி வரை ஆனைக்கோட்டை 3ம்கட்டை உதயதாரகை ச.ச. நிலையத்திலும் இடம் பெறும்.

[க-120]

### இன்று ஒரு தகவல்

## போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து

பிச்சைக்காரன் ஒருவன் இருந்தான் அவன் தினமும் காலையில் பிச்சை எடுப்பதற்குச் சுறுசுறுப்பான தெருவிற்குச் செல்வான். ஒரு நாள் அவனது துர் அதிர்ஷ்டம் பல வீடுகளிற்குச் சென்றான். ஆனால் பிச்சை கிடைக்கவில்லை. யாருமே அவனுக்கு பணம் தர முன்வரவில்லை. அவனுக்கு மிகவும் பசி. அதனால் பக்கத்தில் வசித்த கோடீஸ்வரன் வீட்டிற்கு போகத் தீர்மானித்தான்.

கோடீஸ்வான் ஒரு நல்ல மனிதன் என்றும் எவருக்கும் உதவுவதற்கு தவறாதவர் என்றும் கேள்விப்பட்டான். பிச்சைக்காரன் அந்தப் பெரிய மாளிகைக்கு முன்வந்து கதவில் தட்டினான். ஒரு வேலைக்காரன் வந்து கதவைத் திறந்து எசமான் பூஜை அறையில் வழிபாட்டில் மூழ்கி இருப்பதாகக் கூறினான். எனினும் வேலைக்காரன் பிச்சைக்காரனை அழைத்து பூஜை அறையின் கதவிற்கு வெளியே நிற்க வைத்து ''நீ இங்கே நில், எசமான் தொழுகையைமுடிப்பார்; நீ உனக்கு வேண்டியதை கேட்கலாம்'' என்றான்.

பிச்சைக்காரன் கோடீஸ்வரன் வெளியே வருவதை எதிர்பார்த்து நிற்கையில் அவரின் பிரார்த்தனை அவனுக்குக் கேட்டது. ''நான் மேலும் மேலும் அதிகமான பணம் அடைய வேண்டும்; மேலும் அதிக பொருள் பெறவேண்டும்; எனது அதிகாரம் மேலும் உயரவேண்டும்......

பிச்சைக்காரன் இதைக் கேட்டதும் அந்த வீட்டை விட்டு வெளியேறத் தீர்மானித்தான். கோடீஸ்வரன் பிரார்த்தனையை முடித்து விட்டு பூஜை அறையிலிருந்து வெளியே வந்தார்.

வீட்டிற்கு வந்தவர் வெளியேறுவதைக் கண்டு செல்வந்தர்பிச்சைக்காரனை அழைத்துக் கேட்டார். என்னுடன் பேசக் கூடவில்லை. ஏன் வெளியேறுகிறாய்? உனக்கு என்ன வேண்டும்? தயவு செய்து கூறு ஏதாவது பணம் வேண்டுமா? பிச்சைக்காரன் விடை தந்தான்:- நான் கோடீஸ்வரனிடம் சிறியளவு பணம் கேட்க வந்தேன். ஆனால் கோடீஸ்வரனைக் காணவில்லை. பதிலாக என்னிலும் பார்க்க பெரிய பிச்சைக்காரனைப் பார்த்தேன். நீர் அதிகமான பணத்திற்கும், பொருளுக்கும், பதவிக்கும் பிச்சை கேட்டுக் கொண்டிருந்தீர். நான் இன்னொரு பிச்சைக் காரனிடம் பிச்சை கேட்கப் போவதில்லை.

செல்வம் என்பது எமது பையிலுள்ள பணத்தின் அளவில் தங்கியிருப்பதில்லை. நாம் அதிகம் ஆசைப்பட்டால் நாம் பிச்சைக் காரனைப் போல் தான் வறுமையிலேயே இருப்போம். நம்மிடம் இருப்பதை வைத்துத் திருப்தியடைவது தான் அதன் இரகசியம்; அப்போது நாம் மகிழ்ச்சியுடனும் செல்வமுடனும் இருப்போம்; சாந்தி காண்பதற்கு, நாம் நமது ஆசைகளிற்கு எல்லை அமைக்க வேண்டும்.

(ஐந்து மனித மேம்பாடுகளும் மனித உன்னத நிலையும் என்ற நூலிலிருந்து.)

## வருடாந்த உற்சவம்

(அரியாலை)

பொன்னாலை அருள்மிகு ஸ்ரீவரதராஜப் பெருமான் ஆலய வருடாந்த இரதோற்சவம் இன்று புதன் கிழமையும் தீர்த்தோற்சவம் நாளை வியாழக்கிழமையும் இடம் பெறவுள்ளது.

(செ-106)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி-நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் ஆலய வருடாந்த இரதோற்சவம் இன்று புதன் கிழமையும், தீர்த்தோற்சவம் நாளை வியாழக்கிழமையும் நடைபெறவுள்ளது.

(செ)

## நல்லையில் சொற் பொழிவு

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய இந்துப் பேரவையின் நல்லைக் கந்தன் உற்சவ காலத் தெய்வீக நிகழ்ச்சிகள் தொடரில் இன்று புதன் கிழமை ''குறள்காட்டும் சைவ நெறி'' என்னும் தலைப்பில் சிவத்திரு. இரா. செல்வவடிவேல் சொற் பொழிவாற்றவுள்ளார்

இந் நிகழ்வு அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் பி.ப 2.00 மணிக்கு இடம் பெறவுள்ளது. (செ)

## 2 ஆயிரம் ரூபா வழங்கல்

[மானிப்பாய்]

யாழ். குடா நாட்டில் அண்மையில் இடம் பெற்ற சம்பவங்களின் போது தென்மராட்சி உட்பட மற்றும் ஏனைய பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து வலி-தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தங்கியிருக்கும் பின்வரும் J/130 சுதுமலை தெற்கு, J/137 மானிப்பாய் வடக்கு, J/140 மானிப்பாய் மேற்கு, J/146 பண்டத்தரிப்பு கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த 360 குடும்பங்களுக்கு தலா இரண்டாயிரம் ரூபா கடந்த 17ம், 18ம், திகதிகளில் வழங்கப்பட்டது. (க-12-120)

## நல்லூரான் திருவடிக்கு - 19



### அலமலரும் பொழுதிலெனைக் காக்கவாராய்

திரிபுரம தனைநகைசெய் தெரியரனி னிடமுறையும்
சிவையுமையாள் தருசக்தி - வடிவேலா

திரிபுவன முழுதுமுன பெருபயம தகலவுன
திருவருளை யள்ளி யள்ளித் - தரவேணும்

பரிதியென ஒளிருமுன திருமுகம ததனையுன்கி
பரிவினொடு உனைவணங்க - அருள்வேலா

பழுதில்கவி கீரனவன் தொழுதனிசைக் குருகிமலைக்
குகையதனை யிடித்து வழி - தந்தபாலா

அரியதமிழ் கொடுஉனது அடிமலரைத் தொழுதுகவி
அடிமையிவன் தொடுக்கவருள் - நல்குவேலா

அறிவதுவும் போய்மதர மொழியதுவு மேகுழறி
அலமலரும் பொழுதிலெனைக் - காக்கவாராய்

அரியினொடு அயனவனும் மறிவரிய பதமலரை
அறியவினை யாடல்பல - காட்டுநேசா

அபயமொடு வரமருளு வரதகர மொடுதிகழும்
நல்லைநகர் நின்றருளு - கந்தவேளே

நாயன்மார்கட்டு இராசையா குகதாசன்

## நல்லையிலே.....

வேல் கொண்டு வினை வென்று
நூல் கொண்டு தமிழ் தந்து
சேல் விழியாள் மனங் கொண்டு
மால் மருகன் ஆடுகின்றான் நல்லையிலே-

கால் கொண்ட துயர் கொன்று
ஊழ் தொடுத்த கணை வென்று
''வாழ்'' என்ற வரம் தந்த
வேள் எமக்கு அருளிடுவான் தொல்லையில்லை.

மாவைப்பாவை

ஒப்பந்த அடிப்படையில்

# கடமையாற்றும் ஊழியரை நிரந்தரமாக்குவது குறித்து ஆராய்வு

## குமரா நல்லைப் பெருமானே

(யாழ்ப்பாணம்)

பிரதேச சபைகளில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றுவோரை நிரந்தரமாக்குவது தொடர்பாகவும் மேலதிக ஆளணிகள் ஏற்படுத்துவது பற்றியும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிதலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

யாழ்.மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினருமான எஸ். தவராசா ஜெகன், மற்றும் பத்து பிரதேச சபைகளின் தலைவர்கள், உள்ளூராட்சி ஆணையாளர் சபாபதிப்பிள்ளை, உள்ளூராட்சி உதவிஆணையாளர் கிருஷ்ணசாமி, பொது நிர்வாக அமைச்சு செயலர் பரமலிங்கம் உட்பட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

நல்லூர் பிரதேச சபையில் மேலதிக ஆயுள் வேத வைத்திய சாலைகள் இயங்குவது குறித்தும் மேலதிக நூலக செயற்பாடுகள் பற்றியும் அப்பிரதேசசபைத் தலைவர் மணிபல்லவராஜன் (நிசாந்தன்) கூட்டத்தில் எடுத்துரைத்தார். (க-03)

## மட்டக்களப்பில்
# தமிழ் காங்கிரஸ் கட்சி முதல் தடவையாக போட்டியிடும்
## கட்சிவட்டாரங்கள் தெரிவிப்பு

[மட்டக்களப்பு]

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கைத் தமிழ் காங்கிரஸ் முதல்தடவையாக போட்டியிடஉள்ளதாக தெரியவருகிறது:

இக்கட்சி வேட்பாளர் பட்டியலில் சட்டத்தரணிகள், கல்விமான்கள், சமூகசேவையாளர்கள் இடம்பெறஉள்ளனர்.

இதேவேளை தமிழர் விடுதலைக்கூட்டணி செயற்குழு மட்டக்களப்பு மாவட்டவேட்பாளர் பட்டியலைத் தயாரிப்பதற்காக எதிர்வரும் 26ஆம் திகதி கூடுகிறது.

முன்னாள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கவுள்ளார்;

தமிழர்விடு தலைக் கூட்டணி வேட்பாளர் பட்டியலிற்கு இதுவரை 15விண்ணப்பங்கள் கிடைத்திருப்பதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன:

இதேவேளை ஸ்ரீ லங்கா முஸ்லிம்காங்கிரஸ்பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து போட்டியிடுவதா அல்லது தனித்து போட்டியிடுவதா என்பதுபற்றிதீர்மானம் எடுக்காத நிலையில் தினமும் கூடி ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [சு-60]

# முன்பள்ளி ஆசிரியர்கள் சந்திப்பு

(தென்மராட்சி)

அறவழிப்போராட்டக் குழுவின் முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் செயலக பணியாளர்களுக்கான முக்கிய சந்திப்பு இம்மாதம் 26ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு பருத்தித்துறையிலுள்ள உழைக்கும்மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் சத்துணவுக் கூடத்தில் இடம்பெறவுள்ளது,

இச்சந்திப்பில் அனைவரையும் பங்குகொள்ளும் வண்ணம் தலைவர் வி. ஜீ. தங்கவேல் கேட்டுள்ளார்.

(செ - 77)

---

அருளால் உலகைத் தாங்கி வரும்
அப்பன் மகிழப் பிரணவத்தைக்
குருவாய் அமர்ந்து அருள் புரிந்த
குகனே முந்தைக் கொடிய வினை
இருளிற் கிடந்து கரை காணா
தேங்கும் அபலை உய்ய வருட்
குருவாய் வந்தா லாகாதோ
குமரா நல்லைப் பெருமானே;

வி. பிரான்சிஸ்

## நல்லூர்க் கந்தனே வருக வருக...

அடியார் குறைதீர்க்கும் மயிலோனே வருக
அரும் பெரும் சோதியான கந்தனே வருக
வள்ளி தெய்வானையுடன் அமர்ந்தினிது வருக
வண்ண மயிலில் வீற்றிருக்கும் நல்லையா வருக!

செல்வி. கிருஷ்ணமூர்த்தி துளசிகா

## நல்லூர்க் கந்தனே வா வா வா.

நல்லூர்க் கந்தனே வா வா வா
நம்குறை தீர்க்க வா வா வா
மாயோன் மருகனே வா வா வா
மயில் வாசனனே வா வா வா
குறிஞ்சிக் குமரனே வா வா வா
குன்றில் உறைபவனே வா வா வா
இமயவன் மைந்தனே வா வா வா
இன்னல்கள் அகற்றிட வா வா வா

கி. ஜனகன்

# முதலீட்டாளர்களைக் கவர்வதில் தமிழ் நாடு முன்னணி வகிக்கிறது

## முதல்வர் மு. கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

முதலீட்டாளர்களை கவர்வதில் நாட்டிலேயே தமிழ் நாடு தான் முன்னணியில் நிற்கிறதென்று முதலமைச்சர்



மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சென்னையை அடுத்துள்ள ஸ்ரீ பெரம்பத்தூரில் ஏயார் இந்தியா என்ற தொழிற் சாலையைத் திறந்துவைத்துப் பேசுகையில்; உலகம் முழுவதிலுமிருந்து தொழிற் சாலைகளை அமைப்பதற்கு தொழிலதிபர்கள் வருகிறார்களென்றும் குறிப்பிட்டார்.

தமிழ் நாட்டிலுள்ள சாதக மான சூழல்கள் குறிப்பாக தொழிற்சாலைகள் அமைப்பதற்கான இடங்கள் தொழிலாளர்கள் மற்றும் இலகுவில் கிடைக்கக்கூடிய மூலப் பொருட்கள் தமிழக அரசின் அநுசரனைகள் இவற்றால் தொழிலதிபர்கள் நாடிவருகிறார்களென்றும் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் இத்தொழிற் சாலை இயற்கையாகக் கிடைக்கும் காற்றைக் கொண்டு பிற வாயுக்களைத் தயாரித்து மற்றும் தொழிற் சாலைகளுக்குக் கொடுக்கிறதென்றும் இது போன்ற தொழிற் சாலைகளை ஆரம்பிக்க தொழிலதிபர்கள் முன்வரவேண்டும் என்றும் கலைஞர் முதல்வர் மு. கருணாநிதி தெரிவித்தார்;

இத்தொழிற்சாலை அமெரிக்காவில் இயங்கும் ஒரு தொழிற்சாலையின் கிளை என்றும் இதனை அமைக்க 60 கோடி ரூபா செலவாகியதென்றும் தெரிவிக்கப்படுகிறது; (து)

# மசூதி கட்டிய கிறிஸ்தவ அடிமைக்கு மரண தண்டனைதீர்ப்பு வழங்கப்பட்டது

## அல்ஜிலியசில் சம்பவம்

[அல்ஜிலியஸ்]

மசூதி கட்டிய கிறிஸ்தவ அடிமைக்கு மரண தண்டனை வழங்கப்பட்ட சம்பவம் அல்ஜிலியஸ் நாட்டில் இடம் பெற்றுள்ளது.

1660 இல் கிறிஸ்தவ அடிமைக்கு தண்டனையாக வழங்கப்பட்டது ஒருநவீன மசூதிகட்டிமுடிக்க வேண்டும் என்பதாகும். அதேவேளை கட்டி முடித்ததும் விடுதலை செய்யப்படுவார் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது.

கிறிஸ்தவ அடிமை மசூதியைக்கட்டி முடித்து விட்டார் ஆனால் அவருக்கு மரண தண்டனைக்குரிய தீர்ப்பு வழங்கப்பட்டது;

அழகாகவும் கலை நுட்பமாகவும் அவர் மசூதியை அமைத்த போதும் கூட இரகசியமாக ஆங்காங்கு சிலுவைக் குறிகளையும் அமைத்தார் என்பதில் மரண தண்டனை தீர்ப்பு மீண்டும் ஊர்ஜிதம் செய்யப்பட்டது; (க-து)

# உலக தரிசனம்

## நாயுடு தெரிவிப்பு

[புதுடில்லி]

மத்திய அரசை எதிர்ப்பதாகவோ அல்லதுபுறக்கணிப்பதாகவே இக்கூட்டம் அமையாது என்றும் மாநிலங்களின் உரிமையைப் பெறுவதற்கே என்று 8 மாநிலங்களின் கூட்டத்தில் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு தெரிவித்தார்.

டில்லியில் கூடிய 8 மாநிலங்களின் கூட்ட நிதி அறிக்கை தொடர்பாக மேலும் பேசுகையில்; 11வது நிதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மாநிலங்களுக்கான 37.5வித நிதி ஒதுக்கீடு தரும் பாதிப்புகளைச் சுட்டிக் காட்டினார்.

பஞ்சாப், ஹரியானா கேரளம், அஸ்ஸாம் போன்ற 8 மாநிலங்களின் கூட்டத்தில் தயாரிக்கப்பட்ட தீர்மான அறிக்கையை பிரதம மந்திரி அடல் பிஹாரி வாஜ்பாயிடம் மாநிலங்களின் சார்பில் நேற்று முன்தினம் மாலை கையளிக்கப்பட்டது. (து)

## செய்திப்பரல்

★ ரஷ்ய நீர்மூழ்கியை மீட்டெடுக்க 3 மாத காலம் பிடிக்கும் என்று அறிவிக்கப் படுகிறது.

★ அஸாம் மாநிலத்தில் முழுக்கதவடைப்புக்கள் இடம் பெற்றன.

★ மகாத்மா காந்தியின் மருமகளான நிர்மலா காந்தி 91 வது வயதில் நேற்று முன்தினம் காலமானார்.

★ இலங்கை வானொலியின் புகழ் பூத்த அறிவிப்பாளர் அப்துல்ஹமீதின் குரல் இப்பொழுது சிங்கப்பூர் வானொலியில் கேட்கிறது; (து)

### பாஸ்சன் கடற் பிராந்தியத்தில் மூழ்கிய

# "த காஸ்ட்" பணியாளர்கள் மீட்பு பணியில் "ரோபோ" மனிதன்

[மொஸ்கோ]

நோர்வேக்கரைக்குஅப்பால் பாஸ்ரன் கடலில் சிக்கியுள்ள ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பலான "த காஸ்ட்" டில் இருந்து பணியாளர்களை மீட்கும் பணியில் இயந்திர மனிதன் பயன்படுத்தப்படுவது இரண்டாவது திருப்பு முனையாக அமைந்துள்ளது.

நோர்வே சுழியோடிகள் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் அண்மையில் மேற்படி கப்பலை நெருங்கி அதன் முதலாவது பாதுகாப்பு கதவை உடைத்து நுழைந்து கப்பல் பணியாளரில் ஒருவரின் சடலத்தை இனம் கண்டதோடு திரும்பியிருந்தமை தெரிந்ததே.

இதன் அடுத்த கட்டமாக அதிநவீன தொழில்நுட்பத்தில் உருவான இயந்திர மனிதனின் துணைகொண்டு கப்பலில் 9வது பாதுகாப்பு கதவுவரை திறக்கப்பட்டுள்ளமையானது இரண்டாவது திருப்பு முனையாகக் கருதப் படுகின்றது;

இருப்பினும் கப்பல் பணியாளர் எவரது சடலமும் இம் முயற்சியின்போது தென்படவில்லைஎனகுறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, நீர்மூழ்கிக் கப்பல் தொடர்பாக முன்னெடுக்கப்படும் முயற்சிகளில் ஏற்பட்டுள்ள ஆபத்துகள் உணரப்பட்டுள்ளதால் தொடர்ந்தும் இயந்திர மனிதனையே பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் உலகின் கவனத்தை தன்பால் ஈர்த்துள்ள ரஷ்ய அணுநீர்மூழ்கிக் கப்பலில் இருந்த பணியாளர்களது சடலங்களை மீட்கும் பணி துரிதமாக இடம்பெறலாம் என கருதப்படுகிறது.

இதேவேளை, மேற்படி கப்பலில் இருந்து மரணமடைந்த 118 ரஷ்ய பணியாளர்களதும் மறைவையொட்டி இன்று ரஷ்யாவில் துக்கதினம் அனுட்டிக்கப்படுகிறது. (உ)

# தமிழக அடிமை சிறுவர்கள் 17 பேர் பொலிஸாரால் மீட்கப்பட்டனர்

(புதுடில்லி)

கர்நாடக மாநிலத்தில் அடிமைகளாக வைக்கப்பட்டிருந்த 17 தமிழகச் சிறுவர்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளனர்;

கர்நாடக மாநிலத்தின் பண்ணையொன்றில் பல சிறுவர்கள் கொத்தடிமைகளாக துன்புறுத்தப்படுவதாக கிடைத்த ரகசியத் தகவல் ஒன்றினையடுத்து. அப்பகுதி பொலிஸாரால் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தப்பட்டது.

அவ்வேளையில் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் 17 சிறுவர்களும் மீட்கப்பட்டனர்.

இவர்களில் பெண்பிள்ளைகளும் அடங்குவர் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடல். உள ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட மேற்படி சிறுவர்கள் தமிழக சிறுவர் நலன் பேணும் அமைப்பொன்றிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்; (உ)

### கிழக்கு தீமோரில்

# வன்செயலிற்கு காரணமானோரை விட்டுவைக்கக்கூடாது

## இந்தோனேசிய வெளியுறவு அமைச்சர்கூளுரை

(ஜகார்த்தா)

கடந்த ஆண்டு கிழக்குத்திமோரில் இடம்பெற்ற வன் செயல்களுக்குக் காரணமானவர்களை விட்டுவைக்கக்கூடாதென இந்தோனேசியா அரசை ஜகார்த்தா வெளியுறவு அமைச்சர் ஒருவர்கோரியுள்ளார்;

கிழக்குத்திமோரில் இடம் பெற்ற வன்முறைகளுக்குக் காரணமானவர்கள் இனம் கண்டு தண்டிக்கப்பட வேண்டும்எனவும் மேலும் அவ் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சென்றவருடம் அங்குஇடம் பெற்ற கலவரங்களில் ஆயிரக் கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டமையும் 25 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் அகதிகளாக்கப்பட்டமையும் அறிந்ததே. [உ]

# நக்கீரன் ஆசிரியர் கோபாலிடமிருந்து பதிலை எதிர்பார்க்கும் அமைச்சர்கள்

(சென்னை)

சந்தனக் கடத்தல் வீரப்பனைச் சந்திக்கச் சென்ற நக்கீரன் ஆசிரியர் கோபாலிடமிருந்து பதில் வருமென்று எதிர் பார்க்கப்படுவதாக நக்கீரன் உதவி ஆசிரியர் காமராஜ் கூறியிருக்கிறார்.

ஆசிரியர் கோபால்தொலைபேசி மூலமாகவோஒலிநாடா மூலமாகவோ தகவல் தெரிவிக்கலாமென்று நேற்றுவரை எதிர்பார்க்கப்பட்டது;

இரண்டாவது முறையாக 450 பக்க இரு மாநிலங்களின் அறிக்கைகளுடன் நக்கீரன் ஆசிரியர் வீரப்பனைச் சந்திக்கச் சென்றது குறிப்பிடத்தக்கது.

இருமாநில அமைச்சர்களும் வீரப்பனின் பதிலை எதிர் பார்த்துக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது; (து)

# ஜம்மு-காஷ்மீரில் கண்ணிவெடி இராணுவ அதிகாரிகள் பலர்பலி

(ஸ்ரீநகர்)

ஜம்மு-காஷ்மீர் பள்ளத்தாக்கில் நிகழ்ந்த கண்ணிவெடிச் சம்பவத்தின் போது ஜீப்பில் பயணம் செய்த இரு இராணுவ உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டதுடன் மூன்று பேர் படுகாயமடைந்தனர்.

கும்பகோணமாவட்டத்தில் சாலையொன்றில்தீவிர வாதிகளால் வைக்கப்பட்டிருந்த நிலக் கண்ணி வெடிப்பிலேயே இச்சேதம் நிகழ்ந்தது.

இச்சம்பவத்தில் பிரிகேடியர் ஒருவரும் கேணல் ஒருவரும் ஸ்தலத்திலே கொல்லப்பட்டதாகவும் சொல்லப் படுகிறது.

இதேவேளையில், தொடர் இராணுவ அணியினர் மீது மேற் கொள்ளப்பட்ட மற்றொரு தாக்குதலின் போது 2 இராணுவ வீரர்கள் பலியாகியுள்ளதுடன் பலர் காயமடைந்தனர்.

இப்பகுதிகளில் தேற்றும் சிறு சிறு தாக்குதல்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

## 5 பேர் பலி

(டக்கா)

பங்களாதேஷில் காஸ் சிலிண்டர் ஒன்று வெடித்ததில் 2 குழந்தைகள் உட்பட 5 பேர் பலியாகியுள்ளார்கள். 50க்கு மேற்பட்டோர் பலத்த எரிகாயங்களுக்கு உள்ளானார்கள்;

உள்ளூர்விழா ஒன்றில் இந்தவிபத்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (து)

### பயங்கரவாதிகளின்

# அச்சுறுத்தலின் மத்தியிலும் செச்சினியாவில் இடைத் தேர்தல்

(மொஸ்கோ)

ரஷ்யாவின் கட்டுப்பாட்டிலுள்ள செச்சினியப் பகுதியில், பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் இடைத்தேர்தல் நடைபெற்று முடிந்துள்ளது.

செச்சினிய தேர்தல் தொகுதி ஒன்றுக்கு பிரதிநிதியை தேர்ந்தெடுப்பதற்காக நடாத்தப்பட்ட மேற்படி தேர்தலில் 13 வேட்பாளர் போட்டியிட்டனர்;

தேர்தலையொட்டி அப்பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை ரஷ்யத்தரப்பினர் மேற்கொண்ட போது பல செச்சினியத் தீவிரவாதிகள் வாக்குச்சாவடிகளில் கைக்குண்டுகளை வீசி தேர்தலை குழப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் தெரியவந்துள்ளது. [உ]

எண்ணியார் எண்ணம்
இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச்
செயின்
-குறள்

# வலம்புரி

## காலம் கடந்த ஓலங்கள்

பாராளுமன்றம் கலைக்கப்பட்டு விட்டது. இன்னும் ஆறுவெருடங்கள் கதிரைகளுக்கு சூடேற்றுவதற்கு சுறுசுறுப்புஆரம்பமாகிவிட்ட வேளை இது. இத்தனை காலமும் செய்து முடிக்காத இனப் பிரச்சினைத் தீர்வு பற்றி எல்லோரும் பேசுகிறார்கள். உபாயங்கள்சொல்லுகிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அப்பட்டமாக புலிகளுடன் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் செய்வேன் என்று வாயசைத்துள்ளார். வாக்கு வேட்டைக்கு வெளிக்கிளம்பிய வேட்டை நாய்கள் பயங்கரவாத ஒழிப்பு, நாட்டில் பிரச்சினை இல்லையே என்றெல்லாம் பிதற்றுகின்ற வேளை முன்னைய எதிர்க்கட்சித் தலைவர் பழைய குப்பைகளைக் கிளறுவது போலவும் தோன்றுகிறது. யாராகவிருந்தாலும் ஆட்சி பீடத்தில் தான் கழுகுப் பார்வையைச் செலுத்துகிறார்கள்.

பரிவார மூர்த்திகளான பல்வேறு அணை, துணைக் கட்சிகள் கொடுக்குக் கட்டிக் கொண்டு நாட்டின் சமாதானத்திற்கு உதவுவதாகக் கூறுகின்றனர். இக்கூற்றுக்கள் நாட்டில் அமைதியின்மையை அம்பலப்படுத்துவதோடு அமைதிகளை அணுக வேண்டியவர்கள் யார் என்பதையும் கோடிகாட்டுவதாகவும் அமைகிறது.

மூலமூர்த்தியே அமைதி விழாவிற்கு முக்கியமென்பதை இன்னும் புரியாதவர்கள் தமிழ் மக்களை மேலும் சிதறடிக்கப்பார்க்கிறார்கள். கெட்டிக்காரன் புளுகு எட்டு நாள் மட்டும் தான் என்பது அனுபவ மொழி.

நீதியும் நேர்மையும் நிலை குலையாத நெஞ்சமுமே நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும். காலம் காலமாக இதனையே வழுத்தி வந்திருக்கிறோம். எந்த ஆட்சித் தலைவர்களானாலும் முதலும் கடையுமாக இனப் பிரச்சினை என்ற முட்டினைத் தீர்த்து வைக்க முன் வரவேண்டும். நாடு குட்டிச் சுவராகுமுன் — சுடுகாடாக நீறு பூக்குமுன் மனம் திரும்பியாக வேண்டும்; திருந்தியாக வேண்டும்.

நோர்வே நாட்டின்முன்னாள் பிரதமர் ஜெல்மக்கே பொன்டேவிக்சமாதானத்தை எட்டக்கூறிய மூன்று அம்சங்களை தந்துள்ளார்.

அன்புடன் ஆசிரியர்

# அந்தகாரம் சூழ்ந்திருந்த வேளையில்
# தோன்றிய ஒளி கீதைக் கண்ணன்

**இன்றுகிருஷ்ண ஜயந்தி தினத்தை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

ஸ்ரீகண்ணபரமாத்மா கீதையில் உலகம் முழுவதும் தூங்கும் காலத்தில் ஞானி விழித்துக் கொண்டிருக்கிறார் என்கிறார். எங்கும் இருள் சூழ்ந்து இருக்கும் போது எங்காவது ஒரு ஒளி தோன்றினால் எவ்வளவு ஆனந்தமாயிருக்கும். இவ்விதமாகவே ஆவணி மாத கிருஷ்ண பட்ச அட்டமி தினத்தில் நள்ளிரவு வேளையில் உலகின் அஞ்ஞான இருளைப் போக்க என கண்ணபிரான் அவதரித்தார்.

சிவபிரானுக்குச் சிவராத்திரியும், அம்பிகைக்கு நவராத்திரியும், முருகனுக்கு கந்தஷஷ்டியும், விநாயகருக்கு விநாயக ஷஷ்டியுமென அமைந்திருப்பது போலல்லாது, கண்ணனுக்குப்பிறந்த இடமான கோகுலத்தையும், பிறந்த திதியான அட்டமியையும் சேர்த்து கோகுலாட்டமி கிருஷ்ண ஜயந்தி நன்னாளாகக் கொண்டாடப்படுகின்றது.

மானிடருக்கு ஒரு வருடம் தேவர்களுக்கு ஒரு நாள் உத்தராயணம் தேவர்களுக்குப் பகற் பொழுதாகவும் தெட்சணாயணம் இரவுப் பொழுதாகவும் அமைகின்றது தெட்சணாயணத்தில் வரும் ஆவணி மாத முழு இருட்டு நாளாகிய கிருஷ்ண பட்ச அட்டமி நள்ளிரவில் பிறந்ததனாற் கார்மேக வண்ணனாக காட்சி தருபவன் கண்ணபிரானாவான்.

### தீராத விளையாட்டுப் பிள்ளை

கோகுலத்தில் பிறந்து மாடு மேய்ப்பவனாகவும், குழல் ஊதிக் கூத்தாடுபவனாகவும், தீராதவிளையாட்டுப்பிள்ளையாக தெருவிலே தொல்லைகள் செய்பவனாகவும், உலக இயக்கத்தையே தன் செயற்பாட்டால் உணரவைப்பவனாக விளங்குகின்றான். இந்தத் தீராத விளையாட்டுப் பிள்ளையானகண்ணபிரானே பார்த்த சாரதியாகவும், திரௌபதியின் மானங்காத்த ஆபத்பாந்தவனாகவும், குசேலர் போன்றோரை ரட்சித்த ரட்சகனாகவும், பீஷ்மருக்கு முத்தியளித்த பெருஞானியாகவும் உலகிற்கு அஞ்ஞான இருளை அகற்றி பேரொளி விளங்க வைத்த பெரும் பரமாத்மாவாக கொள்ளப்படுகின்றார்.

### விசுவரூபம் எடுத்தவன்

சிறுகுழந்தையாயிருந்தது முதல் பல லீலைகள் செய்தும் தன் தாயாருக்கு உலகம் முழுவதையும் தனது வாய்க்குள் காட்டியும், பிரம்மதேவருக்கே தானே பசுவாகவும், கன்றாகவும் காட்சி கொடுத்தும் பாண்டவர்களுக்கு தன் சுயரூபத்தைக் காட்டியும், எல்லாவற்றிலும் உயர் நிலையாக பகவத்கீதையிலே அர்ச்சுனனுக்கு தானே எல்லாம் எனத தமக்குள் அடங்கிய அற்புத விசுவரூபத்தைக் காட்டியும், கீதோபதேசம் செய்தும் உலகின் அஞ்ஞான இருளகற்றி மெய்ஞ்ஞான ஒளிக்கு வழிகாட்டியவன் கண்ணன்.

கிருஷ்ண ஜயந்தி, கோகுலாட்டமி எனக் கண்ணன் பிறந்த நன்நாளான ஆவணி மாதக் கிருஷ்ண பட்ச அட்டமி, ரோகினி நட்சத்திரத் திருநாளிலே தீராத விளையாட்டுப் பிள்ளையாகிய கண்ணபரமாத்மாவைப் போற்றி வழிபடுவதுடன் கீதோபதேசங்களைப் படித்து வையகத்தில் வாழ்வாங்கு வாழும் வகைதனைத் தெரிந்து நல்வாழ்வு வாழ்வோமாக.

உலகில் அதர்மங்களை அழித்து தர்மங்களை நிலைநாட்டவும், தீயவர்களிடமிருந்து நல்லோரைக் காக்கவும் கண்ணபரமாத்மா பத்துவித (தசாவதாரம்) அவதாரங்களை எடுத்தார். இந்தத் தசாவதாரங்கள் ஒவ்வொன்றும் நவநாயகர்களாகிய, நவக்கிரகங்களை தம் பலங்கொண்டவையாக விளங்குவதனால் தசாவதார கிரக வழிபாட்டின் மூலம் நாம் வாழ்வை வளம்படுத்த முயல்வோமாக.

### நீர்வை மணி

தசாவதாரமும் – கிரகங்களும்

இராமாவதாரம்-சூரியன்
கிருஷ்ணாவதாரம் - சந்திரன்
நரசிம்மாவதாரம்-செவ்வாய்
கல்கி அவதாரம்-புதன்
வாமனாவதாரம்-வியாழன்
பரசுராமாவதாரம்-சுக்கிரன்
கூர்ம அவதாரம்-சனி
வராகஅவதாரம்-ராகு
மச்சஅவதாரம்-கேது
பலராமஅவதாரம்-(குளிகன்)

— வேதாந்த தேசிகர் —

ராமாவதார சூர்யஸ்ய. சந்த்ரஸ்ய யதுநாயக
நரசிம்ஹோ பூமிபுத்ரஸ்ய-சௌம்ய சோமா சுதஸ்யா
வாமநோ விபுதேந்த்ரஸ்ய-பார்க்கவோ பார்க்கவஸ்யச
கூர்மோ பாஸ்கரபுத்ரஸ்ய-யோக சாந்யேயி கேசரா

# காங்கேசன் சீமெந்துக்கூட்டுத்தாபனத்தின்
# ஊழியர்கள் 450 பேர் நேற்று மறியல் போர்

## சகல ஊழியருக்கும் 600 ரூபா சம்பள உயர்வு வழங்கவேண்டும்

(தென்மராட்சி)

காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபன பொதுத் தொழிலாளர் யூனியனைச் சேர்ந்த சுமார் 450 தொழிலாளர்கள் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ள காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபனக் காரியாலயத்தின் முன்பும் உருப்பிராயிலுள்ள கொங்கிறீட் வேலைத்தளத்தின் முன்பும் ஏககாலத்தில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதன் காரணமாக மேற்படி இரு இடங்களிலும் வேலைகள் ஸ்தம்பிதமடைந்தன.

அரசினால் கொண்டு வரப்பட்ட இடைக்காலப் படியான ரூபா 600 ஐ வேலைக்குப் பணிக்கப்படாத ஊழியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் எனக் கோரியே இம் மறியல் போராட்டம் நடத்தப்பட்டது. இப் போராட்டம் மேற்படி யூனியனின் தலைவர் பி. பாலகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்றது.

மறியல் போராட்டத்தில் பங்கு கொண்டிருந்தவர்கள் சுலோக அட்டைகளைக் கைகளில்பிடித்தவண்ணம் குறித்த அலுவலகங்களுக்குள் பணியாளர்கள் உட்செல்ல முடியாதபடி தடுத்து நின்றனர். இதனால் பணிக்கு வருகை தந்திருந்த கூட்டுத்தாபன ஊழியர்கள் அலுவலகத்துக்கு உட்செல்லவில்லை.

மறியல் போராட்டத்தில் பங்கு கொண்டிருந்தவர்கள் சுலோகங்களைக் கொண்ட சுலோக அட்டைகளைப்பிடித்திருந்தனர்.

அரசாங்க சேவையில் ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களுக்கு இடைக்காலப்படி 600 ரூபாவை வழங்கமுடியுமானால் சேவையில் இருக்கும் சீமெந்துத் தொழிற்சாலை ஊழியர் ஏன் வழங்க முடியாது? இது நீதியற்றதும் நியாயமற்றதும் என யூனியன் சார்பில் நேற்றைய தினம் கூறப்பட்டது.

அத்தோடு எமது மறியல் போராட்டத்துக்கு சார்பான வெற்றி கிடைக்காவிடில் மறியல் போராட்டம் மேலும் விஸ்தரிக்கப்படும் என யூனியன் தலைவர் பி. பாலகிருஸ்ணன் தெரிவித்தார்.

(க-03-77)

# சோதனைகள் தீர்த்தருள யாதவா தேரேறி வருக

காவல் தெய்வமே காப்பாற்ற தேரேறி வருக!
காரியங்கள் யாவும் நிறைவேற்ற தேரேறி வருக!
ஏவலாய் தூது சென்ற கண்ணனே தேரேறி வருக!
ஈழத்தமிழருக்கு உதவிட மாதவா தேரேறி வருக!
பாதகங்கள் தீர்த்திட பரந்தாமா தேரேறி வருக!
பாண்டவர் போல் எமைக் காக்க தேரேறி வருக!
சோதனைகள் தீர்த்தருள யாதவா தேரேறி வருக!
சுதந்திரமாய் ஈழமண்ணுக்குவிடிவுதர தேரேறிவருக

மதுர கவி காரை,
எம். பி. அருளானந்தம்

இன்று பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்திலும் அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீநாக வரத நாராயணர் தேவஸ்தானத்திலும் நடைபெறவுள்ள இரதோற்சவ விழாவினை ஒட்டி இக் கவிதை பிரசுரமாகின்றது.

# நல்லூர் உற்சவ கால மருத்துவ முகாமில் தினமும் பலர் சிகிச்சை பெறுகின்றனர்

(அரியாலை)

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு பக்தர்களின் நன்மை கருதி அமைக்கப்பட்டிருக்கும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் மருத்துவ முகாமில் தினமும் சுமார் 15 பேர் சிகிச்சை பெற்று செல்கின்றனர்.

கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி முதலுதவிச் சிகிச்சை அளித்தவுடன் யாழ். கிளையின் அம்புலன்ஸ் வண்டி மூலம் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்து வருகின்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் சகடைக் கால் ஏறியதில் காயமடைந்த நபரொருவரை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்தது குறிப்பிடத்தக்கது.

[செ-106]

## "போரூட்" நிறுவனம் உதவி

[மந்திகை]

வடமராட்சி வடக்கு, வடமராட்சி தெற்கு, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் வறிய குடும்பங்களுக்கு போரூட் நிறுவனம் நூற்றுக் கணக்கான வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளது.

வறிய குடும்பங்களை இனம் கண்டு 125 வீடுகளையும், 107 மலசலகூடங்களையும், 80 க்கு மேற்பட்ட கிணறுகளையும் அமைத்துக் கொடுத்திருப்பதன் மூலம் 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நன்மையடைந்துள்ளன.

(உ-23)

## தாச்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தாச்சிச் சங்க அனுசரணையுடன்இந்து விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டி இந்து விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்று அண்ணா விளையாட்டுக்கழகமும், கலைமகள் விளையாட்டுக் கழகமும் நாளை கலைமகள் விளையாட்டுக்கழகமும் ஐக்கிய விளையாட்டுக் கழகமும், நாளை மறுதினம் ஈஸ்டர் விளையாட்டுக்கழகமும் கலைவாணி விளையாட்டுக் கழகமும் இப் போட்டியில் கலந்து கொள்கின்றன. (வ)

யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

# வவுனியா சுடுகாடாக இருந்த போது மக்களுக்குச் சேவை செய்தோம்

## புளொட் சித்தார்த்தன் பிரச்சாரம்

(வவுனியா அலுவலக நிருபர்)

கடந்தமுறை வவுனியாவில் நீதியாகவும், சுதந்திரமாகவும் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தற்பாதுகாப்புக்காக நாம் ஆயுதங்களை வைத்திருந்த போதும் ஒரு துப்பாக்கி ரவையை கூட பாவிக்காது அமோக வெற்றி பெற்றோம். அதனைச் சகிக்க முடியாதவர்களே நாம் ஆயுதங்களைக் காட்டி மக்களைப் பயமுறுத்தியதாகக் குற்றம் சாட்டுகின்றனர் என்று புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்: எமக்கெதிராக தமிழர் விடுதலைக் கூட்டணி தாக்கல் செய்திருந்த தேர்தல் வழக்கு தள்ளுபடியாகி எமது வெற்றியை உறுதிப்படுத்தியது. அன்று தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் போட்டியிட்டு தோல்வியைத் தழுவிக்கொண்டனர்.

இத் தேர்தலில் நாம் தகுதியான வேட்பாளர்களை நிறுத்த உள்ளோம். 1990 ஆம் ஆண்டு வன்செயலால் வவுனியா நகரம் சுடுகாடு போல் காட்சியளித்த சமயம் அங்கு மக்களுக்கு எமது சேவைகளைச் செய்தோம்.

தான் இம்முறை தேர்தலில் யாழ்·மாவட்டத்தில் போட்டியிட இருப்பதால் கடந்த காலத்தில் தனக்கு வழங்கிய ஒத்துழைப்பை தனது கட்சி வேட்பாளருக்கு வழங்கி ஆதரவு அளிக்குமாறும் சித்தார்த்தன் கேட்டுள்ளார். (வ)

**கூட்டணி...**

ராசா, ஏ. அருட்குமார், ச. குலதேவராசா, பி. ஜீவரட்ணம் என். ஆப்தீன் ஆகியோர் தேர்தலில் போட்டியிடவுள்ளனர்.

இவ்வேட்பாளர் பட்டியல் எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை தாக்கல் செய்யப்படுமென கூட்டணியின் வவுனியா கிளைத்தலைவர் என். சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். (வ)

**முன்னாள்...**

னார்.

பின் 91ஆம் ஆண்டு முதல் 1994ஆம் ஆண்டுவரை யாழ், அரச அதிபராகக் கடமையாற்றினார். இவர் அரச அதிபராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் யாழ்ப்பாணம் அசாதாரண சூழ்நிலைக்குள்ளாகி இருந்தமையால் பல்வேறுவிதமான கஷ்டங்களின் மத்தியில் தனது கடமைகளை ஆற்றவேண்டியவராக இருந்ததுடன் யாழ். செயலகத்தின் மீது நடத்தப்பட்ட விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலில் காயமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

யாழ். அரச அதிபராக இருந்து இளைப்பாறிய பின் அவுஸ்திரேலியாவில் சில காலம் தங்கிய பின் நாடு திரும்பியிருந்தார்.

இவர் உதவி அரச அதிபராகவும், அரச அதிபராகவும் கடமையாற்றிய காலப் பகுதியில் மக்கள் குறைகளைக் கேட்டு அவற்றை தீர்த்து வைப்பதில் அதிக அக்கறையுடனும், ஆர்வத்துடனும் செயற்பட்டார்.

இவரது இறுதிக் கிரியைகள் நாளை வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்று பொறளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படவுள்ளது. (வ)

கஜன்
திரை
ஊர்காவற்றுறை
கார்த்திக், ரேவதி
ஜனகராஜ், குஷ்பு
நடிப்பில்
கிழக்கு வாசல்
காட்சி நேரம்
பி.ப 3.30 மணி
9ரு[illegible]5 2)

## ஆலயங்களுக்கு அருகிலுள்ள மதுபானக் கடைகள் அகற்றப்படும்

(கொழும்பு)

வழிபாட்டுத் தலங்களுக்கு அருகில் உள்ள மதுபானக் கடைகள் அகற்றப்பட உள்ளதாக மதுவரித் திணைக்கள ஆணையாளர் பந்துல விஜயரத்தின தெரிவித்துள்ளார்.

பொது மக்களின் முறைப்பாடுகளை அடுத்தே இந் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது; மதுபான நிலையங்கள் அந்தந்தப் பிரதேச சபையின் அனுமதியுடன் அமைக்கப்பட வேண்டும் எனவும் மதுவரித்திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார். (வ)

**நேற்று...**

வைத்ததாகத் தெரிவிக்கப் படுகிறது.

இச் ஷெல் தாக்குதலின் போது எவரும் காயமடையவில்லையாயினும், வீட்டின் யன்னல்கள் சேதமடைந்திருப்பதாகத்தெரிவிக்கப்படுகிறது. (வ)

**ஜனநாயக...**

இதேவேளை முஸ்லிம் ஐக்கியவிடுதலை முன்னணி சகல மாவட்டங்களிலும்போட்டியிடவிருப்பதாக முன்னணியின் தலைவர் முஜிபுர்ரஹ்மான் தெரிவித்தார்.

சிங்கள உறுமய கட்சி வடக்கு- கிழக்கு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் போட்டியிட இருப்பதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (வ)

**வன்னியில்... முதல்**

அமைப்பாளர் சிவகுமார் ரகு கருத்து வெளியிடுகையில் கஷ்டப்பட்ட மக்களுக்குச் சேவை செய்வதே எமது நோக்கம் எனவும், இதற்காகவே நாம் தேர்தலில் போட்டியிடுகிறோம் என்றும் இது தொடர்பான வேட்பாளர் பட்டியல் விரைவில் வெளியிடப்படும் என்றும் தெரிவித்தார். (வ)

**தமிழர்...**

என்பது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், ஓய்வு பெற்ற ஆசிரியர் அல்போன்ஸ் மேரி ஆகியோரும், பட்டிருப்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பி.செல்வராஜா, சட்டத்தரணி இ. சோமசுந்தரம், விவசாயி உத்தமன் அருளம்பலம், வைத்திய சாலை தொலைபேசி இயக்குநர் எம். விமலேஸ்வரன் ஆகியோரும்,

கல்குடாவில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் பி· மாணிக்கவாசகத்தின் புதல்வர் எம். உதயகுமார், அதிபர் நிமலன் சௌந்தரநாயகம் ஆகியோரும் போட்டி இடவுள்ளனர்.

இந்த வேட்பாளர்களின் பெயர்கள் பொதுச் சபையின் அங்கீகாரத்துக்கு விடப்பட்டுள்ளது; பொதுச் சபை அடுத்த சனிக்கிழமை கூடவுள்ளது. (வ)

**வன்னியில்...**

வாக்காளர்கள் அதிகமாகவுள்ளனர்.

வவுனியாவில் 91 ஆயிரத்து 589 வாக்காளர்களும் மன்னாரில் 68 ஆயிரத்து 468 வாக்காளர்களும் முல்லைத்தீவில் 53ஆயிரத்து 54 வாக்காளர்களும் வெலிஓயாப் பகுதியில் மட்டும் 966 வாக்காளர்களும் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவக்கட்டுப்பாடற்ற முல்லைத்தீவில் மட்டும் 52 ஆயிரத்து88 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்;

**சகல**

வவுனியா புகையிரத நிலைய வீதியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் இச் சந்திப்பு நடைபெற்றது.

வீ. ஆனந்தசங்கரி அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில் கடந்த கால சூழ்நிலை வேறு, இப்போதைய சூழ்நிலை வேறு. இந்த அடிப்படையில் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை முன்னெடுத்துச் செல்லும் நாம் அம்பாறை தவிர்ந்த ஏனைய சகல தொகுதிகளிலும் போட்டியிட உள்ளோம். தமிழ் மக்கள் சுதந்திரமாக வாக்களிக்க அனுமதிக்கப்பட்டால், பாராளுமன்றத்தின் தமிழ்ப் பிரதிநிதித்துவம் அனைத்தையும் கூட்டணி கைப்பற்றும், எனவே இத் தேர்தலில் மக்கள் துணிந்து வாக்களிக்க முன்வர வேண்டும்.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தமிழ் குழுக்களுடைய செயற்பாடுகள் குறித்து நாம் ஜனாதிபதியை சந்தித்த பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பிரஸ்தாபித்துள்ளோம். இவர்கள் அரசின் முழு ஆசீர்வாதத்துடன் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஜனநாயக வழிக்கு வந்த ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதம் களையப்பட்டு சுதந்திரமான தேர்தலுக்கு வழி வகை செய்ய வேண்டும்.

மக்கள் பயந்த காலம் இப்போது மாறிவிட்டது. வன்னியில் கூட்டணி சார்பில் போட்டியிட பலர் முன்வந்துள்ளனர். இது மக்களுக்கு தமிழ் குழுக்களிடம் இருந்து விடுதலை வேண்டும் என்பதையே எடுத்துக் காட்டுகிறது என்றும் ஆனந்தசங்கரி கூறினார்.

பத்திரிகையாளருடனான இச் சந்திப்பின் போது யாழ். மாநகரசபை பிரதி மேஜர் ரவிராஜ் மற்றும் வன்னியில் போட்டியிடும் வேட்பாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர். (வ)

## ★ சிற்றி ஒவ் றிங்கோ கப்பல் எம் .எல். எஸ். முகவர் நிலையம் பயணச்சீட்டு வழங்கும்

(யாழ்ப்பாணம்)

கப்பல் பயணிகளுக்கான பயணச்சீட்டு வழங்கும் பணியை தொடர்ந்தும் தனியார் முகவர் நிலையமான எம்.எல்.எஸ் ரேடிங் கம்பனி மேற்கொள்ளுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையே பயணிகளை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள சிற்றி ஒவ் றிங்கோ கப்பலுக்கான பயணச் சீட்டுகள் மகாலக்ஷ்மி நிறுவனத்தில் வைத்து வழங்கப்படுமென நிறுவன உரிமையாளர் நேற்றிரவு வலம்புரிக்குத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வழமைபோல் நாளை வியாழக்கிழமை 'சிற்றி ஒவ் றிங்கோ' பருத்தித்துறையிலிருந்து திருகோணமலைக்கு பயணிகளை ஏற்றிச்செல்லுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-03)

**அமைச்சரவை...**

யிட்டு 11 இடங்களைக் கைப்பற்றும் என்று தெரிவித்த கருத்துக்கு அமைச்சர் பௌஸி வெளியிட்ட அறிக்கையில் அமைச்சர் அஷ்ரப் பொதுத் தேர்தலில் தனித்துப்போட்டியிட்டால் 5 ஆசனங்களே கிடைக்கும் என்றும் தனித்துப் போட்டியிட்டு இதைவிடக் கூடிய ஆசனங்கள் முஸ்லிம் காங்கிரசுக்குக் கிடைக்குமானால் அரசியலில் இருந்து நான் விலகிவிடுவேன் என்று பௌஸி அஷ்ரப்பிற்கு சவால் விடுத்ததாகவும் தெரிவிக்கப் படுகிறது.

அமைச்சர் பௌஸியின் மேற்படி கூற்றை அடுத்தே அமைச்சர் அஷ்ரப் பொது ஜன ஐக்கிய முன்னணியில் இருந்து திடீரென்று வெளியேறியுள்ளார். அமைச்சர் அஷ்ரப்பின் வெளியேற்றம் அரசிற்கு பெருத்த தலையிடியைக் கொடுத்திருப்பதாகவும், பாரிய திருப்பத்தை ஏற்படுத்தலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் பௌஸி பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு தேவை இல்லை என்று கூறியிருப்பதால் அரசுடன் ஒட்டி இருப்பது சிறந்தது என தான் கருதவில்லை என்று அஷ்ரப் கூறியுள்ளார்.

இதே வேளை பொது ஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் அமைச்சர் டி.எம். ஜெயரத்தின இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் அமைச்சர் பௌஸியின் கருத்து அவரது தனிப்பட்ட கூற்றாகும்; அரசுடையதல்ல எனவே அமைச்சர் அஷ்ரப் தொடர்ந்தும் அரசுக்கு ஆதரவு வழங்குவார் என்றும் தெரிவித்துள்ளார்.

இவை இவ்வாறு இருக்க அமைச்சரின் இராஜினாமாவை ஜனாதிபதி (இச்செய்தி எழுதும்வரை) ஏற்கவில்லை என அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்தன. (வ)

**தேர்தலில்..**

எம்.சிற்றம்பலம் வலம்புரிக்கு நேற்றுத் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் எம்.சிவசிதம்பரத்தின் சகோதரர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

**தேர்தல்...**

என்றும் பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தேர்தல் செயலகத்திற்கு பொறுப்பதிகாரியாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏ.ஏ. சமரகிரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

தேர்தல் காலத்தில் நாடு முழுவதிலுமுள்ள பொலிஸ் நிலையங்களுடன் தேர்தல் வன்முறை தொடர்பாக உடனடியாகவும், நேரடியாகவும் தொடர்புகளைப் பெறும் இணைப்பாளராகவும் இவர் செயற்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை முன்னைய தேர்தல் காலங்களில் வன்முறைகளில் ஈடுபட்டவர்களின் பெயர்ப்பட்டியலை தயாரிக்குமாறும் சகலபொலிஸ் நிலையங்களிற்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. (ந-7)

விற்பனைக்குண்டு
அச்சகங்களுக்குத் தேவையான
வச்சிரம் (வீனஸ்)
விற்பனைக்குண்டு
(மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம்)
தொடர்பு;-
"வலம்புரி"
இல. 15 வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

கண்ணீர் அஞ்சலி
மத்தியத்தின் கொடி நித்தியம் நிலைக்க மண்ணுக்கு உவந்தளித்த மாணவ முத்துக்களில் ஒருவரும் யாழ். மாவட்ட முன்னாள் அரச அதிபருமாகிய
உயர்திரு
கார்த்திகேசு மாணிக்கவாசகர்
அவர்களின் மரணச் செய்திகேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அன்னாரது ஆத்மா இறைபதம் அடைய இறைஞ்சுகின்றோம்.
அதிபர், ஆசிரியர், மாணவர்
பெற்றோர், பழைய மாணவர்
யாழ்: மத்தியகல்லூரி,
யாழ்ப்பாணம்.
(கி/733)

இப்பத்திரிகை "வலம்புரி" [illegible] இல. 15, வெள்ளாந்தெரு யாழ்ப்பாணம் [illegible]
[illegible] 2000 ஆம் ஆண்டு [illegible] 23 ஆம் திகதி [illegible]